6-APR 1918

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | ஏப்பிரல் 1918. | இலக்கம் 4.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவசடங்கையும் தேவவாக்கியத்தையும் பற்றிய குறிப்புகள்.

யூதஜனங்கள் எஜிப்து தேசத்தரசனாகிய பாரவோனின் அடிமைத்தனத்திலிருந்த காலத்தில் சர்வேசுரன் மோயீசனைக் கொண்டு அவ்வடிமைத்தனத்தினின்று அவர்களை விடுவித்து, அவர்களுக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டிருந்த செழிப்பும் சிறப்பும் பொருந்திய கானான் தேசத்துக்கு அவர்களைப் பயணப்படுத்தி அழைத்துக்கொண்டுபோகச் செய்ததற்காகவும், பாரவோன் முதற்கொண்டு ஏழைக் குடியானவன் வரையிலுமுள்ள எஜிப்து நாட்டாரின் தலைச்சன் பிள்ளைகளனைவரையும் அவர் (சர்வேசுரன்) ஒரு சம்மனசானவரைக் கொண்டு சங்காரஞ் செய்வித்ததுபோல் தங்களுடைய தலைச்சன் பிள்ளைகளையும் அவர் சங்காரம் செய்வியாமல் காப்பாற்றினதற்காகவும் அவர்கள் தங்களுடைய ஆழ்ந்த நன்றியறிதலைக்காட்ட வருஷாவருஷமும் ஒரு பண்டிகையைக் கொண்டாடி வந்தார்கள். இப் பண்டிகையே பாஸ்கா பண்டிகையாகும். ஆயினும் இப்பண்டிகை நாம் இப்போது கொண்டாடி வரும் பாஸ்காபண்டிகையான கர்த்தர் உயிர்த்த திருநாளின் அடையாளமும் அறிகுறியுமேயன்றி வேறல்ல. அதெப்படியெனில், ஆதித் தந்தை தாயான ஆதாம் ஏவாளின் சந்ததியாகிய மனுக்குலம் பாவத்தினால் நித்திய மரணத்துக்குள்ளாகி, தனக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டிருந்த மோட்ச இராச்சியத்தை யிழந்து பசாசுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. மனுக்குலத்தின் இக் கண்ணராவியைக் கண்ணுற்ற சர்வேசுரன் மனமிரங்கி, முந்தி மோயீசனைக் கொண்டு யூதஜனங்களை பாரவோன் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததுபோல இதையும் பசாசின் அடிமைத்தனத்தினின்று மீட்க, தம்முடைய ஏக குமாரனையே இவ்வுலகத்துக் கனுப்பினார். அவர் இதன் பாவாக்கிரமங்களுககாக பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தருளினார். அவர் என்றையத்தினம் கல்லறையை விட்டு உயிர்த்தாரோ அன்றையத்தினமே மனுக்குலம் பசாசின் அடிமைததனத்தினின்று மீட்கப்பட்டது. மனுக்குலத்தின் மரணத்துக்குக் காரணமாயிருந்த பாவம் அவரு

டைய பாடுகளினுலும் மரணத்தினுலும் நிர்மூலமாக்கப்பட்டது. இதன் நித்திய மரணமும் அவருடைய ஓட்டோலக உத்தானத்தினுல் வெல்லப்பட்டது. இப்படியாக நம்மாண்டவரின் மரணத்தினுலும் உத்தானத்தினுலுமே நமக்குத் தேவ அருளும், ஆசீரும, நித்திய சீவியமும் அருளப்பட்டு நாம் பசாசின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டிருக்கிறோம. சர்வேசுரன் நமக்குச் செய்தருளின இந்த மனோ வாக்குக் கெட்டாத பேருபகாரங்களே நமக்கு ஞாபகப்படுத்தவும், இவைகளுக்காக நாம் அவருக்கு நம்முடைய நன்றியறிதலைக் காட்டவும் பரிசுத்த திருச்சபை பாஸ்கா பண்டிகையைக் கொண்டாட நமக்குக் கற்பித்திருக்கிறது. மெய்யாகவே யூதஜனங்கள் தங்களுடைய நன்றியறிதலை சர்வேசுரனுக்குக் காட்ட பாஸ்கா பண்டிகையைக் கொண்டாடினதைவிட நாம் அதிகமாய் நம்முடைய நனறியறிதலை அவருக்குக் காட்ட இப்பண்டிகையைக்கொண்டாட கடமைப்பட்டிருக்கிறோம். அதேனென்றால், அவர்கள் பாரவோன் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டார்கள். நாமோ அவர்களுடையவும் நம்முடையவும் ஜென்ம சத்துருவாகிய பசாசின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டிருக்கிறோம். அவர்கள் அழிந்துபோகிற இப பிரபஞ்ச சுகங்களேத் தரத்தக்க நீர்வளம் நிலவளம் பொருந்திய கானுன்தேசத்துக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டார்கள். நாமோ அழியாத மோட்ச பேரின்ப பாக்கியத்துக்கும அவ்விடத்தில் சர்வேசுரனோடு அரசாளவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் நாம எவ்வளவோ நனறியறிதலோடும், ஞான சந்தோஷத்தோடும் பாஸ்கா பண்டிகையான நமது கர்த்தர் உயிர்த்த திருநாளைக் கொண்டாட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

* * *

திருச்சபையின திருநாள் அட்டவணைப்படி கர்த்தர் உயிர்த்தத் திருநாள் மாறுந் திருநாட்களிலொன்றாகும். ஆனபடியால, இத் திருநாள் பிரதி வருஷமும் ஞாயிற்றுக்கிழமையிலேயே கொண்டாடப்படும. மேலும நமதாண்டவர் ஞாயிற்றுக்கிழமையனறு உயிர்த்தபடியினுல அநதத் தினத்திலேயே இத் திருநாளைக் கொண்டாடத் திருச்சபை திட்டஞ் செய்திருக்கிறது. திவ்ய இரட்சகருடைய உத்தானத்தினுல் நமக் கருளப்பட்டிருக்கிற அருட்பிரசாதங்களையும், பேறுபலன்களேயும் நமக்கு நன்றாய் ஞாபகப்படுத்துமாறும், அவைகளைப்பற்றி நாம் அவருக்கு எப்போதும் நன்றியறிதலுள்ளவர்களா யிருந்து அவரைப் புகழ்ந்து கொண்டாட நமக்கு கடமையுண்டென்று படிப்பிக்குமாறும் இந்தத் திருநாளைத் திருச்சபை விசேஷவிதமாய்க் கொண்டாடிவருகிறது. வழக்கமாய் ஒரு பெரிய திருநாள் திருச்சபையில் 8 நாளைக்குக் கொண்டாடப்படும். இந்தத் திருநாளோ ஏறக்குறைய 6 வாரக்காலங் கொண்டாடப்பட்டுவருகிறது. இந்த ஆறு வாரத்தில் வரும் பிரதி ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்திலும் நம்மாண்டவருடைய உத்தானத்தின் ஆறு பிரதான பலன்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இத் திருநாளுக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்தில் திவ்ய இரட்சகர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குப் பாவசங்கீர்த்தன மூலமாய்ப் பாவபபொறுத்தல் அளிக்க வல்லமை கொடுத்ததைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே அவருடைய உத்தானத்தின் முதற் பலனும். இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்திற் சொலலப்பட்டிருக்கிற இரண்டாவது பலன் யாதென்றால், நமதாண்டவர் நல்ல ஆயனு யிருக்கிறபடியால் தம்முடைய ஆட்டுக்குட்டிகளான விசுவாசிகளுடைய க்ஷேம லாபங்களின்மட்டில் பொறுப்பும் அக்கரையுங் கொண்டிருக்கிறாரென்றும், ஆனபடியால் அவர் நாளடைவில் திருச்சபையைத் தழைத்தோங்கச் செய்து சகல ஜாதி ஜனங்களேயும் தம்முடைய அருளுக்கும் ஆசீருக்கும் பாத்திரவான்களாக்குவாரென்பதுமே. மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்தில் நம்முடைய திவ்ய இரட்சகர் சொல்லி யிருப்பதாவது: தம்மைப் பின்செல்லுகிறவர்கள் துன்பங்களுக் குள்ளாவார்களென்றும், ஆயினும் அவர்களுடைய துன்பங்கள் சிறிது காலத்துக்குள் ஒழிந்து ஒருபோதும் மாறாத இன்பங்களாகிவிடுமென்பதனுல், மோட்ச பேரின்ப பாக்கியமே அவருடைய உத்தானத்தினுல் நமக்குக்கிடைக்கும் மூன்றாவது பலன். இஸ்பிரீத்துசாந்து

வான சர்வேசுரனை நமக்குத் தேற்றரவு செய்கிறவராய் அனுப்ப நமதாண்டவர் வாக்குத்தத்தஞ் செய்ததே நான்காம் வாரத்திய ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனபடியால் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் திருச்சபையிலும் விசுவாசிகளின் இருதயத்திலும் அரசாளுவதே அவருடைய உத்தானத்தின் நான்காவது பலன். ஐந்தாவதாக நமக்குக் கிடைக்கும் பலன் யாதென்றால் நம்முடைய பக்தியுள்ள மன்றாட்டுகளுக்கு சர்வேசுரன் தப்பாமல் செவிகொடுப்பா ரென்பதே. ஏனென்றால் தம்முடைய நாமத்தால் தம் பிதாவிடத்தில் கேட்கப்படுவனவெல்லாம் கொடுக்கப்படுமென்று நமதாண்டவர் செய்த வாக்குத்தத்தமே ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆறாவது ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்தில் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனுடைய ஆகமனத்தைப்பற்றி நமதாண்டவர் செய்த வாக்குத்தத்தை மறுபடியும் புதுப்பித்து அவர் உலக முடியுமட்டும் திருச்சபையோ டிருப்பாரென்று திருவுளம்பற்றுகிறார். ஆகையால் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனுடைய பராமரிப்பும் பாதுகாவலும் திருச்சபைக்குக் கடைசி பரியந்தம் கிடைக்கப்பெற்றதே நமதாண்டவருடைய உத்தானத்தின் ஆறாவது பலனாகும்.

*
* *

“அல்லேலுய்யா” எனும் பதத்தை திருச்சபை பாஸ்கு காலத்தில் அடிக்கடி உச்சரிக்கவும் பாடவும் நாம் கேட்கிறோம். “அல்லேலுய்யா” என்பது ஒரு ஹிபுரு பாஷைச் சொல். இதன் அருத்தம் “சர்வேசுரனுக்குத்தோத்திர முண்டாகக்கடவதாக” என்பதாம். நமதாண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய உத்தானத்தின் மூலமாய்ச் சர்வேசுரன் நமக்குச் செய்தருளிய பல பேருபகாரங்களுக்காக அவருக்குத் தோத்திரம் புரிய இவ் வார்த்தையினால் திருச்சபை நம்மைக் கூப்பிட்டழைக்கின்றது.

*
* *

கர்த்தர் உயிர்த்த சுரூபத்தை அல்லது படத்தை நாம் காணும்போது அதில் அவர் தம்முடைய கையில் ஒரு கொடியைப் பிடித்திருக்கப் பார்க்கிறோம். இக்கொடியானது அவர் தம்முடைய உத்தானத்தினா லடைந்த வெற்றியைக் குறிக்கின்றது. அவர் இப் பிரபஞ்ச சீவியத்தில் பசாசோடு போராடவேண்டியதா யிருந்தது. சிலுவையி லறையுண்டு மரணமானபோது முற்றிலும் தோல்வி யடைந்தவராகக் காணப்பட்டார். அப்போது நரகமும் அதனுடைய கூளிகளும் ஜெயபேரிகை முழங்கினவென்பதற் கையமில்லை. ஆனால் அவர் மரணமடைந்த மூன்றா நாளோ ஜெயசீலராய்க் கல்லறையை விட்டு உயிர்த்தெழுந்தருளினார். தம்முடைய உத்தானத்தினால் அந்த நரக சர்ப்பத்தின் தலையை நசுக்கினார். மேலும் மனுக்குலத்தை அதன் அடிமைத்தனத்தினின்றும் ஆளுகையினின்றும் மீட்டிரட்சித்தார். இந்த அவருடைய வெற்றியை நமக்குத் தெரியச்செய்யும்பொருட்டே அவருடைய உயிர்த்த சுரூபத்தின் கையில் கொடி கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் உயிர்த்த சுரூபத்தை அல்லது படத்தை நாம் காணும்போதெல்லாம் அவரடைந்த வெற்றியைப்பற்றி சந்தோஷங்கொள்வதுமல்லாமல், நம்முடைய இரட்சண்ய சத்துருக்களுடன் நாம் வீரியத்துடன் போராடி ஜெயங்கொள்ள பிரதிக்கினையுஞ் செய்துகொள்வோமாக. “சோதிக்கப்படுகிற மனிதன் பாக்கியவான்; ஏனெனில் அவன் சோதிக்கப்பட்ட பிறகு சீவியத்தின் முடியை அடைந்துகொள்வான்” (இயாகப்பர். I, 12).

SISTER MARY OF THE DIVINE HEART.

திவ்ய இருதயத்தின் மரியம்மாள்.

(முன் தொடர்ச்சி.)

நமதாண்டவர் அடிக்கடி மரிதாயாரை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதின் பேரில், 1899-ம் வருஷம் ஜனவரி மாதம் பரிசுத்த பிதாவுக்கு அவள் மறுபடியும் ஒரு நிருபம் எழுதியனுப்பினாள். அவள் வரைந்த நிருபத்தை நாம் இங்கு மொழிபெயர்த்துத் தருகிறோம்.

"மிகவும் பரிசுத்த பிதாவே,

சென்ற ஜூன் மாதம் நான் தங்களுக்கு அறிவித்த விஷயத்தைப்பற்றி மறுபடியும் பேச அடியாளுக்கு உத்தரவு அளிக்கும்படி உம்மை மிகுந்த தாழ்ச்சி வினயத்துடன் கேட்க உமது பாதார விந்தங்களை யடுத்து வருகிறேன். அப்போது நான் அபாயகரமான வியாதியினின்று சற்று குணப்பட்டிருந்தேன். ஆகிலும் நான் எழுத சக்தியற்றவளாய் இருந்ததினுல் அந் நிருபம் வேறொருவரைக் கொண்டு எழுத நேரிட்டது. இப்போது நான் இன்னும் மெத்த வியாதியாய்ப் படுக்கையைவிட் டெழுந்திருக்க முடியாவிடினும் பென்சிலால் எழுதத்தான் கூடுமாயிருக்கிறது. முந்தி எழுதிய கடிதத்தில் நமதாண்டவர் என்னுடைய அபாத்திரத்தைப் பாராமல் தமது மட்டில்லாத இரக்கத்தினுல் எனக்கு அளித்த வரப்பிரசாதங்களில் சிலவற்றை உமக்கு வெளிப்படுத்தி யிருக்கிறேன். அவர் முன்போலவே அதே இரக்கத்தோடு என்னை நடத்திக்கொண்டு வருகிறதை மெத்த வினயத்துடன் உமக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன். நமதாண்டவருடைய திட்டமான கட்டளையை முன்னிட்டு, என் ஆத்தும குருவின் அநுமதியின்பேரிலும், முன்னமே என் கடிதத்தில் வரைந்துள்ள விசேஷத்தைப் பற்றி நமதாண்டவர் எனக்கு வெளிப்படுத்தியுள்ள புது விஷயங்களைப்பற்றியும் உங்கள் சமுகத்தில் மெத்த ஆசார வணக்கத்துடன் எடுத்துரைக்கிறேன்.

சென்ற கோடைகாலத்தில் தேவரீர் வியாதியாய் விழுந்தபோது தங்களுடைய விருத்தாப்பியத்தி னிமித்தம் தங்கள் பிள்ளைகளின் இருதயங்கள் கவலையால் மிகவும் கலவரப்பட்டன.

தமது திவ்ய இருதயத்துக்கு உலக முழுதும் ஒப்புக்கொடுக்கப்படுவதை முன்னிட்டு உம்முடைய சீவிய நாட்களை நீடிக்கும்படி செய்வதாக நமதாண்டவர் எனக்குத் தெரிவித்தார். அதை அறிந்து நான் மெத்த ஆறுதல் அடைந்தேன்.

அதற்குப்பின் டிசம்பர் மாதத்தின் தலை வெள்ளியன்று, (உலகமுழுவதும் தமது திவ்ய இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்தலாகிய) இந்தப் பெரியவரப்பிரசாதத்தை உமக்கு அளிப்பதற்காக உம்முடைய சீவியநாட்களை நீடிக்கச் செய்ததாகவும்; அவருடைய இருதயத்தின் ஆசையை நிறைவேற்றின பின்னர், மரணத்துக்கு நீர் உம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் எனக்குத் திருவுளம்பற்றினுர். நீர் இந்த நேர்ச்சி காணிக்கையை நிறைவேற்றினபின், இப்பூலோக யாத்திரையை முடிப்பீரென்று என் புத்தியிலே படும்படியாகச் செய்தார்.

அமலோற்பவ மாதா திருவிழாவின் முந்தின நாளன்று தமது திவ்ய இருதய பத்தி வணக்கத்தின் புதுக் கிளர்ச்சியால் பூலோகத்தின்மேல் ஓர் நவமான பிரகாசம் உதிக்கும்படி செய்வதாக நமதாண்டவர் எனக்கு வெளியிட்டார். "Quia hodie descendit Lux magna super terram"--"பூமியின்மீது இன்று பெரிய தோர் பிரகாசம் இறங்கிவந்தது" என்று கர்த்தர் பிறந்த திருநாளின் மூன்றுவது பூசையில் சொல்லப்படும் இவ்வார்த்தைகள் என் இருதயத்தை ஊடுருவின.

சேசுவின் இருதயமாகிய இச்சூரியன், அதாவது இவ்வெளிச்சம் பூமியின்மீது தன் கதிர்களை முதல் மங்கலாயும், பிறகு மிகத் தெளிவாயும் வீசுகிறதையும், கடைசியில் அவ்வொளியால் உலகமெல்லாம் ஜொலிக்கப்பெற்று துலங்குகிறதையும் என் உள்ளாந்தரத்தில் நான் காண்பது போல் தோன்றிற்று.

"சகல ஜாதி ஜனங்களும் இவ்வொளியின் பிரகாசத்தால் தெளிவிக்கப்படுவார்களென்றும், அதின் கதிர்களின் உக்கிர காங்கையால் உஷ்ணம் கொள்வார்களென்றும் அவர் என்னிடம் கூறினுர்.

தமது ஆராதனைக்குரிய இருதயமானது மென்மேலும் தோத்திரிக்கப்படவும், அதிகமதிகமாய்ச் சகலராலும் அறியப்படவும், உலகத்தின் கண், எங்கும் அதின் வரங்களையும் ஆசீர்வாதங்களையும் பொழிந்தருள அவருக்குள்ள வேகமான ஆசையை நான் கண்டறியலானேன்.

அவருக்குத் தோத்திரமான இக் காரியத்தை நீர் செய்யவும், அவமதிக்கப்பட்ட அவருடைய இருதயத்துக்கு ஆறுதல் தரவும், எல்லா வரப்பிரசாதங்களின் ஊற்றும், சமாதானத்தினுடையவும் பாக்கியத்தினுடையவும் இருப்பிடமுமாகிய இத் திவ்ய இருதயத்தினின்று உச்சிதமான வரங்களை நீர் சம்பாதித்துக்கொள்ளவும் உம்மை அவர் தெரிந்துகொண்டார். அதற்காகத்தான் உமது சீவிய நாட்களை நீடிக்கச்செய்தார்.

உமக்கு இவை யெல்லாம் வெளிப்படுத்த நான் அபாத்திரமானவளென்று உணர்கிறேன். ஆனுல் நமதாண்டவர் என் நீசத்தனத்தை அதிகமதிகமாய் எனக்கு உணர்த்தினபின், அவருடைய இருதயத்தின் பலியாகவும், பத்தினியாகவும்,

என்னை நான் பலியிட்டதைத் திரும்பவும் நான் புதுப்பிக்கவும், எவ்விதத் துன்பங்களையும், நிந்தை அவமானங்களையும் மனப்பூர்வமாய் நான் ஏற்றுக்கொள்ளவும் செய்து, உமக்கு மறுபடியும் இவ் விஷயத்தைப்பற்றி எழுதும்படியாக எனக்குக் கண்டிப்பான கட்டளை தந்தார்.

கத்தோலிக்கு சபை மாத்திரம் அவருக்கு ஒப்புக்கொக்கப்படுதல் போதாதென்று, உலக முழுவதையும் தமக்கு நேர்ச்சியாகத்தரவேண்டுமென்று நமதாண்டவர் கேட்பதானது வியப்புக்குரியதாய்த் தோன்றலாம். ஆனால் சகல இருதயங்களின் பேரிலும் அரசுபுரியவும் அவைகளால் தோத்திரித்து நேசிக்கப்படவும், தமது நேசத்தாலும் கிருபையாலும் அவைகளைப் பற்றியெரியச் செய்யவும் அவருக்குள்ள ஆசை எவ்வளவு வேகமுள்ளதென்றால், ஞானஸ்நானத்தால் அவருக்குச் சொந்தமாயிருப்பவர்களுடைய இருதயங்களை மாத்திரம் அல்ல, ஞான சீவியத்தை ஞானஸ்நானத்தால் பெற்றுக்கொள்ளாதவர்களுடைய இருதயங்களையும் கூட, தமக்கு ஒப்புக்கொடுக்கும்படியாக விரும்புகிறார். ஏனெனில், ஞானஸ்நானம் பெற்றவர்களைச் சத்திய திருச்சபையில் திரும்பவும் சேர்ப்பித்தல் சுலபமாகும் பொருட்டும், அதைப் பெறாதவர்களும், ஒரு நாள் அச்சபையின் மக்களாயிருக்க அழைக்கப்பட்டிருப்பதினாலும், அவர்களுக்காகவும் தமது உயிரையும் இரத்தத்தையும் அவர் கொடுத்திருப்பதினாலும், அவர்களுடைய ஞானப் பிறப்பை இவ்வழியாய்த் தீவிரிக்கும் பொருட்டும், இக்காணிக்கையை விரும்புகிறார்.

ஜூன் மாதம் விடுத்த நிருபதில் இந்த நேர்ச்சிகாணிக்கையைச் செய்வதினால் நமதாண்டவர் அளிக்க விரும்புகிற வரங்களைப்பற்றியும் இதனைச் செய்யும் விதத்தைப் பற்றியும் நான் விவரித்திருக்கிறேன்.

ஆனால் நம்தாண்டவர் திரும்பவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதின்பேரில், அவர் விரும்பும் ஆறுதலை நீர் கொடுத்து அவர் உமக்குத் தந்தருளும் எவுதலைக்கொண்டு திவ்ய இருதயத்தின் பக்தி வணக்கத்துக்கு இன்னும் அதிகமான சோதி மகிமையைத்தந்து அதைச் சிறப்பிக்கும் படியாக, உம்மை மிகவும் பிள்ளைக்குரிய தாழ்மையோடு பஞ்சரித்து மன்றாடுகிறேன்.

நமதாண்டவர் இந்தக் காணிக்கையைத் தவிர வேறொன்றையும் திட்டமாய் எனக்குச் சொல்லவில்லை. ஆனால் அநேக சமயங்களில் சகல ஜாதி ஜனங்களின் நன்மைக்காகவும், அவருடைய இருதயம் மென்மேலும் தோத்திரித்து நேசிக்கப்படவும் அவர் கொண்டுள்ள வேகமான ஆசையை எனக்குக் காண்பிக்கத் திருவுளமானார். நீர் குருக்களையும், விசுவாசிகளையும் எச்சரிப்பதுமன்றி, விசேஷ புதுப்பலன்களை அளித்து தலை வெள்ளிக்கிழமைகளின் பத்தியை விருத்தி செய்வீரானால் அவருக்கு மிகவும் பிரியமாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.

முன் கூறிய காணிக்கையைப்பற்றி நமதாண்டவர் பேசினதுபோல், இவ்விஷயத்தைக் குறித்து, யாதொரு திட்டமாய் எனக்குச் சொல்லவில்லை. ஆனால் இதைப்பற்றி உறுதி மொழியாய்க் கூறுவது கூடாவிடினும், அவருடைய இருதயத்தின் அதிவேகமான ஆசையை நான் ஒருவாறு யூகிக்கக்கூடுமென்று எனக்குத் தோன்றுகிறது. எல்லாநேர்மையோடும் கபடின்மையோடும் தேவரீருக்கு சகலத்தையும் விவரித்தப்பின்னர், மிகவும் பரிசுத்த பிதாவே! நீர் என்னுடைய துணிகரத்தை மன்னிக்கவும், திருச்சபையின் மட்டிலும், உம்முடைய பரிசுத்தத்தனத்தின் கண்ணியத்தின் மட்டிலும் எனக்குள்ள அத்தியந்த பிள்ளைக்குரிய திட பக்தி வணக்கத்தை தயவாய் ஏற்றுக்கொள்ளவும் மன்றாடுகிறேன். தேவரீருடைய சமுகத்தில் உத்தம சிரவணத்துடன் என்னை நான் தாழ்த்திக்கொள்ளுகிறேன். மிகவும் பரிசுத்த பிதாவே, எங்கள் சகோதரிகளுக்கும், இங்கு ஆதரிக்கப்படும் பாலர்களுக்கும், உம்முடைய பாத கமலத்தை வணக்கமாய் முத்திசெய்யும் எனக்கும் உம்முடைய ஆசீர்வாத மனுப்பக் கிருபை செய்வீராக.

இப்படிக்கு;

தேவரீருடைய தாழ்மையும் அபாத்திரமுமான குமாரத்தி திவ்ய இருதயத்தின் மரி சகோதரி,

துரோஸ்ட் சூ விஸ்ஷேரிங்,

நல்லாயன் மடத்து சிரேஷ்ட தாயார்.

ஒப்போர்தோ (போர்துகால்)

6-ம் உ ஜனவரிமீ 1899ஞு.

இந் நிருபம் மூன்று இராசாக்கள் திருநாளன்று பரிசுத்த பிதாவுக்கு அனுப்பப்பட்டு, ஜனவரி மாதம், 15-ம் தேதி வத்திக்கான் அரண்மனை போய்ச் சேர்ந்தது. பரிசுத்த பிதா அதை வாசித்து உள்ள முருகி வியப்படைந்தார். அன்றியும் லிஸ்பனில் முன் ஒரு காலத்தில் பாப்புவின் ஸ்தானாதிபதியாயிருந்த ஜாக்கோபீனி கர்

தினல் ஆண்டவரை அவர் அழைப்பித்து இந்நிருபம் எழுதிய புண்ணியவதியைப்பற்றி விசாரிக்கும்படியாகக் கற்பித்தார். அவர் உடனே ஒப்போர்தோ குருமடத்தின் சிரேஷ்டருக்கு இது விஷயமாக எழுதலானர். மரிதாயார் பரிசுத்த பிதாவுக்கு எழுதிய சங்கதியைப் பற்றி ஒப்போர்தோவில் அறிந்திருந்தவர் இச்சிரேஷ்டர் ஒருவரே.

ஆதலால் இவர் மரிதாயாரைப்பற்றி, அவள் பெரிய புண்ணியவதியென்று, குருப்பிரசாதிகளும்கிறீஸ்துவஜனங்களும், எழைகளும், பிரபுக்களும், அவளைச் சங்கித்து போற்றுகிறார்கள் என்றும், சின்னாட்களுக்குமுன் காலஞ்சென்ற ஒப்போர்தோவின் கர்தினல் ஆண்டவர் அவளை ஒரு அர்ச்சியசிஷ்டவளென்று மதித்து வந்தாரென்றும், தாமே அவளுடைய ஆத்தும குருவாயிருப்பதினல் அவளிடம் விளங்கும் பரித்தியாகம், அதிசயமான கீழ்ப்படிதல், திருச்சபையின் அதிகாரிகள்மட்டில் அவளுக்குள்ள மரியாதை, சிரவணம், அவளுடைய நீடிய காலத்துத் துன்ப சீவியம், துன்பங்களின்மட்டில் அவளுக்குள்ள ஆசை இவையெல்லாம் அவள் சர்வேசுரனால் மிகவும் நேசிக்கப்பட்ட புண்ணியாத்துமம் என்றும், அவளுக்குச் செபத்தியானத்தில் வெளிப்படுத்தப்பட்டவைகள் சர்வேசுரனுடைய செயலாகத்தான் இருக்கலாம் என்று காட்டுகிறதென்றும், தனக்குத் தெரிந்த அளவில் ஜாக்கோபீனி கார்தினலுக்கு பதில் நிருபம் எழுதியனுப்பினர். மரிதாயாரைப்பற்றி இந்த நல்ல அபிப்பிராயமடங்கிய சாட்சிப்பத்திரம் வத்திக்கான் அரண்மனைக்கு வந்து சேர்வதற்குமுன்னதாகவே பரிசுத்தபிதா அவள் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தைத் தயவாய் அளிக்கத் தாற்பரியங்கொண்டார். எனெனில் அவளுடைய மன்ருட்டானது சேசுநாதரின் பிரதிநிதியானவருடைய ஆசைகளுக்கும் கருத்துகளுக்கும் முற்றும் இசைந்ததாயிருந்தது. பரிசுத்த பிதாவானவர் தம்முடைய ஆளுகையின் காலத்தில் சேசுநாதருடைய திரு இருதயத்தின் பக்தி வணக்கத்தை மிகவும் விர்த்திசெய்தார். இன்னும் அதனை பதின் மடங்கு அதிகரிப்பித்து சிறப்பிக்க பிரியங்கொண்டார். சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு உலக முழுவதையும் ஒப்புக்கொடுப்பதில் அந்தப் பத்தி மெத்த சிறப்பும் மேன்மையும் அடையுமல்லவா? இதைவிட மேலான பாக்கியம் அவருக்குக் கிடைப்பது எங்ஙனம்? முதன்முதல் பரிசுத்த பிதா இந்த நேர்ச்சி காணிக்கையை மரிதாயார் குறிப்பிட்ட 1899-வருஷத்தில் அல்ல, அதற்கு அடுத்த வருஷத்தில் செய்ய உத்தேசித்தார். இதை 1900-வருஷத்தில் செய்யப்போவதாகத் தன்னிடம் பேட்டி பெற்ற பிரான்ஸ் தேசத்தின் மேற்றிராணியார் ஒருவருக்குத் தெரிவித்திருந்தார்.

இச்சங்கதியை அந்த மேற்றிராணியார் பத்திரிகை மூலமாய்ப் பிரசுரித்தார். மரிதாயாருக்கு இச்சங்கதியெட்டவே அவளடைந்த சந்தோஷப் பூரிப்புக்கு அளவில்லை. இத்தருணத்தில் பரிசுத்த பிதாவுக்கு அபாயகரமான வியாதி வந்தது. அவருடைய முதிர்ந்த வயதினிமித்தம் அவரைப் பற்றி கிறீஸ்துவ ஜனங்கள் கவலையுற்றார்கள். அவரைச் சொஸ்தப்படுத்துவதற்கு சத்திரம் செய்வது அவசரமாயிருந்தது.

ஆனல் டாக்டர்கள் எதிர் பாராத வண்ணம் தேவாதீனமாய்ப் பாப்பானவர் சுகப்பட்டார். இதைக்கண்ணுற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பாப்பானவர் எழுதிய "Annum Sacrum" என்ற நிருபத்தில் சர்வேசுரன் தமக்குச் செய்த விசேஷ உபகாரத்தை நன்றியறிதலோடு நினைவுகூர்ந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். 1899-ஆ எப்ரல் மாதம் 2-ம் தேதி, சேசுநாதருடைய திரு இருதயத்தின் பிரார்த்தனையைக் கோவில்களில் பிரசித்தமாய்ச் செபிக்கவும் பாடவும் உத்தாரமளிக்கிறார். உலக முழுவதையும் சேசுவின் இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கிறார். இந்தக் காணிக்கையை மெத்த ஆடம்பரக் கொண்டாட்டத்துடன் செய்யவேண்டுமென்றும், அதற்குமுன் முஸ்திப்பாக மூன்று நாள் வணக்கச்செபங்களை (Triduum) ஜூன் மாதம் 9, 10, 11-ம் தேதிகளில் நடத்தவேண்டுமென்றும் திட்டம் செய்கிறார். வத்திக்கான் அரண்மனையிலிருந்து இத் தீர்மானமடங்கிய பத்திரம் மரிதாயாருக்கு அனுப்பப்பட்டது. அதை வாசித்து மரிதாயார் அடைந்த சந்தோஷத்துக்கு கங்குகரையில்லை. இதற்காக சேசுவின் திரு இருதயத்துக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்த திவ்ய பூசை ஒப்புக்கொடுக்கும்படியாகத் தன் ஆத்தும குருவைக் கேட்டுக்கொண்டாள். 13-ம் சிங்கராயர் பாப்பரசராய் ஆண்டுவந்த காலத்தில் தாம் செய்துவந்த வேலைகளில் இதை அதி முக்கியமான காரியம் என்று குறிப்பிடுகிறார். சேசுவின் திரு இருதயம் தனக்கு நியமித்தவேலைமுடிந்ததென்று மரிதாயாரும் தன் மரணத்துக்கு ஆயத்தம் செய்யலானுள்.

மரிதாயாருடைய கடுமையான இந்த நீடிய வியாதியில் மரணம் நெருங்கிவிட்டதென்று அவ ளுடனிருந்தவர்கள் மூன்றுவிசை அபிப்பிராயப் பட்டு சிந்தை கலங்கினார்கள். அவளும் தன் மடத் தின் காரியாதிகளை யெல்லாம் ஒழுங்குபடுத்தி விட்டு தன் திவ்ய பத்தாவின் வருகைக்காகக் கையில் தீபம் பிடித்துக்கொண்டு சந்தோஷமாய் எதிர் பார்த்திருந்தாள். அடிக்கடி பரலோக ஏக் கம் பிடித்தவள்போல் காணப்படுவாள். ஆனால் அவளுடைய திவ்ய பத்தா தாமதித்தார். 1899-ம் வருஷத்தில் அவளுடைய கோரிக்கை பிரகாரம் அர்ச்சியசிஷ்ட வாரத்தின் சடங்குகள் யாவும் மடத்து கோவிலில் வெகு சிறப்பாய் நடந்தன. பெரிய வியாழக்கிழமை யன்று அவள் தேவநற் கருணை உட்கொண்டபின் நமதாண்டவர் அவ ளுக்கு வெளியிட்டதைப் பின்வருமாறு கூறுகி றாள்:—

"நமதாண்டவர், தாம் சகலராலும் கைவி டப்படுவதினால் படும் வருத்தங்களைப்பற்றி என் னிடம் பேசினார். அவைகளில் நான் அவருக்குத் துணையாக இருக்கவேண்டுமென்றும் கூறினார். அன்றியும் கிறீஸ்துவர்களில் பெரும்பான்மை யோரால் அவர் கைவிடப்படுகிறதிலும் முக்கிய மாய்க் குருக்கள் அநேகரால் தம்முடைய பாடுக ளில் தனிமையாய்விட்டுவிடப்படுகிறதினாலேயே தாம் மிகப் பெரிதான துக்கத்தையும் வருத்தத் தையு மடைகிறதாகக் கூறினார். இதற்காக நான் பரிகாரம் செய்யவேண்டுமென்றும் விரும்பினார்" என்பதே. அதே தேதியில் அவளுடைய ஆத்தும குரு மேற்றிராணியாராக நியமிக்கப்படப் போவ தைப்பற்றியும் நமதாண்டவர் அவளுக்கு அறிவித் தார். இதைப்பற்றி தனது ஆத்தும குருவுக்கு மரிதாயார் பின் வருமாறு எழுதுகிறாள்.—

"உமது சுகத்தைப்பற்றி நீர் கவலை யெடுத் துக்கொள்ள வேண்டுமென்றும், உம்மை இன் னும் உன்னதமான ஓர் ஸ்தலத்துக்கு அவர் அழைத்திருக்கிறார் என்றும், நீர் சர்வேசுரனு டைய தோத்திரத்துக்காக உம்முடைய தேக ஆரோக்கியம் பழுதுபடாவண்ணம் உம்முடைய உழைப்பை மட்டுப்படுத்தவேண்டு மென்றும், ஆனால் அப்போது நான் உயிருடன் இரேன் என் றும் உமது நியமனம் நான் மரித்த சின்னாட்களுக் குப்பின் சம்பவிக்கு மென்றும், நமதாண்டவர் எனக்குரைத்தார். உண்மையாகவே நமதாண்ட வர் இதை எனக்குச் சொன்னாரா அல்லது இது என் ரூபிகரத் தோற்றத்தினால் உண்டானதா வென்று நான் சந்தேகித்தேன். ஆனால் என் உள் ளாந்தரத்தில் சந்தேகிக்கக் கூடாவண்ணம் அதை நான் உண்மையெனக் கண்டுணர்ந்தேன்."

இத்தீர்க்கதரிசனம் அவள் மரித்த சிலநாட் களுக்குப்பின் அவள் கூறியதுபோலவே பூர்த்தி யாய் நிறைவேறிற்று. சுவாமி உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயி றன்று (நல்லாயன் ஞாயிறு, Good Shepherd Sunday) மடத்தின் பாலர்களில் சிலர் புது நன்மை வாங்கினார்கள். இதற்காக தன் வியாதி யின் வருத்தத்தைச் சற்றும் கவனியாமல் தானே அவர்களை முஸ்திப்பு செய்தாள். அவர்கள் நன்மை வாங்குவதற்கு முன்னும் பின்னும் செபங்களைத் தானே கோவிலில் வாசித்தாள். அத்தினத்தில் அப்பாலர்களுக்கு அச்சுபநாளின் ஞாபகமாக வெகுமதிகளை யளித்து சில புத்தி மதிகள்கூறி அவர்களிடம் ஓர் வேண்டுதலைச் செய்தாள். அதாவது: நான் என் மரணத்துக்குப் பின் உடனே மோட்ச ராச்சியத்தில் பிரவேசிக் கும்படி என் உத்தரிக்கிற ஸ்தலத்தை எனக்கு இப் பூலோகத்திலேயே அனுப்பும்படியாக நமது நல்ல சர்வேசுரனை நோக்கி மன்றாடுங்கள், என் பதே. மரிதாயாரின் இந்த வேண்டுதலானது அவளுள்ளத்தில் வெகுகாலமாயிருந்த ஆசையி னின்று உதித்ததெனச் சொல்லலாம்.

இதற்காகத்தான் அவள் இஸ்பிரீத்து சாந்து வின் பிரார்த்தனையில்:—"மரணத்துக்குப்பின் நாங்கள் நேராய் மோட்சத்துக்குப்போக பாத்திர மானவர்களாகும்படி மென்மேலும் பரிசுத்த மாய்ச் சீவிக்க எங்களுக்கு ஒத்தாசை செய்தரு ளும்" என்கிற வசனத்தைச் சேர்த்துச்சொல்ல பழகியிருந்தாள். இக்காலத்தில்தான் அவளு டைய ஆத்தும குருவானவர் அவள் சேசுவின் திரு இருதயத்தினின்று பெற்றுக்கொண்ட வரப் பிரசாதங்களின் சரிதையை எழுதி தனக்குக் கொடுக்கும்படியாகக் கட்டளையிட்டார். மரிதா யார் இதற்கு இணங்கி, மே மாதம் 5-ம் தேதி தன் சரித்திரத்தை எழுதிமுடித்து அதைத் தன் ஆத்தும குருவுக்கு அனுப்பினாள். சேசுவின் இரு தய பக்தியானது இன்னுமதிகமாய் அவரிடத்தில் வளர அது ஏதுவாயிருந்தது.—மே மாதம் ஒப் போர்தோவில் வெய்யில் மெத்த தீட்சண்யமா யிருந்ததினால் மரிதாயார் சொல்லிமுடியாத உபத் திரவம் அனுபவித்தாள். மே மாதம் 13-ம் தேதி யிரவு மூளை சுரத்தால் (cerebral fever) பீடிக் கப்பட்டாள். வியாதியும் கொஞ்சத்துக்குள்ளாக

அதிக்கிரமித்துவிட்டது. தன் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்திலும் முக்கியமாய் தன் சிரசிலும் அகோர வேதனைப்பட்டாள். அவளுடைய பார்வையும் கேள்வியும் மந்தப்பட்டன. கடைசி பரியந்தம் கன்னியர் தங்கள் நம்பிக்கையை விடவில்லை. சேசுவின் இருதயத் திருநாளன்று அவர்கள் கோவிலுக்குத் தன்னைத் தூக்கிக்கொண்டு போவார்களென்று மரிதாயார் உறுதிமொழியாகச் சொன்னாள். வைத்தியர் அவள் விஷயமாகக் கலக்கமுற்று இன்னொரு வைத்தியரை யழைப்பித்து ஆலோசனை கேட்கவேண்டுமென்று கூறியபோது, "சேசுவின் திரு இருதயம்தான், என்னுடைய டாக்டர்" என்றாள், அவள் சரியாய்ச் சுவாசிக்கக்கூடாததினால் அவளுடைய படுக்கையினின்று கொசுகுவலையை (Mosquito net) எடுத்துவிடவேண்டியதாயிற்று. அதனால் கொசுக்கடியால் அவளுடைய உபாதை அதிகரித்தது. ஜூன் மாதம் 8-ம் தேதியாகிய சேசுநாதருடைய இருதயத் திருநாளின் முந்தினநாள் மரிதாயாரின் நிலைமை மெத்த ஆபத்திலிருந்தது. அன்று அதிகாலை 4-மணிக்கு சகோதரிகள் குருவானவரையும் டாக்டரையும் அழைத்துவரும்படியாக ஆள்விட்டனுப்பினார்கள். ஏனெனில் அவர்களுடைய நேசமுள்ள தாயார் மரண அவஸ்தைப் பட தொடங்கினாள். மார்புடைப்பால் அவள் பட்ட உபத்திரவம் மெத்த கொரேமாயிருந்தது.

அவளுடைய அவஸ்தை சோகம் சற்று தெளிந்து மூச்சுவிட்டபோது, திவ்ய நற்கருணை அவளுக்குக் கொடுக்கப்பட்டது. நன்றியறிந்த தோத்திரம் செலுத்தியபின் சேசுவின் திரு இருதயத்தைப்பற்றி அதிவேகமான நேச பக்தி உருக்கத்துடன் சம்பாஷித்தாள். சேசுவின் இருதயத் திருநாளைப்பற்றியும் அதன் பின்கொண்டாடப் போகிற மூன்று நாள் வணக்கத்தைப் பற்றியும் அவள் திட்டம் செய்த எற்பாடுள் யாவும் நடந்தனவாவென்று கவலையுடன் கேட்டாள். அன்று காலை 10-மணிக்கு சேசுவின் திரு இருயத்தின் அநேக சுரூபங்கள் அவளிடம் கொண்டுவரப்பட்டன. மூன்று நாள் வணக்கத்தின் சுற்றுப்பிரகாரத்துக்கு உபயோகப்படுத்தவேண்டிய சுரூபத்தை அவளே தெரிந்துகொண்டாள். சேசுவின் திரு இருதயத்தின் கோவில் கட்டவேண்டிய இடத்தையும் குறிப்பிட்டாள். அவளது இக்கோரிக்கையும் சில காலத்துக்குப்பின் அனுகூலமாய் முடிந்தது.—மறுபடியும் பிற்பகல் ஒன்றரை மணிக்கு அவளுடைய ஆத்தும குரு மடத்துக்கு வந்தார்.

அவரிடம் மரிதாயார் பாவசங்கீர்த்தனம் செய்தாள். சில நாட்களாக கூடியமட்டும் தினந்தோறும் பாவசங்கீர்த்தனம் செய்துவந்தாள். ஏனெனில் அடிக்கடி பாவசங்கீர்த்தன ஆசீர்வாதம் பெறுவதில் மெத்த பிரியம்கொண்டாள். குருவானவர் அவள் மிகவும் பலவீனமாயிருந்ததை முன்னிட்டு மரணத்தறுவாயில் கொடுக்கப்படும் பரிபூரண பலனையும் கடைசி ஆசீர்வாதத்தையும் அளித்தார். மரணத்துக்கு அவளை ஆயத்தப்படுத்தினார். எந்த நாளில் மரிப்பது அவளுக்குப் பிரியமென்று அவர் வினவ:—"மாதத்தின் முதல் வெள்ளியிலாவது, அல்லது சேசுவின் இருதயத் திருநாளிலாவது நான் மரிக்க எப்போதும் ஆசித்திருந்தேன். அதற்காக அடிக்கடி மன்றாடியு மிருக்கிறேன்." என்று கூறினாள். அதற்கவர், "அப்படியானால் சந்தோஷமாயிரு, உன்னுடைய கோரிக்கை சித்திக்கும்போ லிருக்கிறது. இந்த நேர்த்தியான திருநாளை நீ மோட்சத்தில் போய்கொண்டாடுவாய். உன் பாக்கியமே பாக்கியம்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்கவே மரிதாயாரின் முகம் பரலோக புன்னகையால் பிரகாசித்தது. அவளுடைய ஆத்தும குரு ஓர் அவசரமான வேலையினிமித்தம் அவளை விட்டுப்போய் விட்டார்.

அவர் போன கொஞ்ச நேரத்துக்குள், மரிதாயார் திரும்பவும் அவஸ்தை சோகமடைந்தாள். அம்மடத்தின் ஸ்தாபகராகிய சங்கைக்குரிய ரூவா (Rua) சுவாமியார் அச்சமயம் மரிதாயாரைக்காண வந்தார். சகோதரிகள் அவளுடைய படுக்கை சுற்றியிருந்தார்கள். மறுபடியும் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது.

தான் தேவநற்கருணை உட்கொள்ள ஆசிப்பதாக பலமுறை கூறினாள். ஆனால் அவளுக்கு அவஸ்தை நன்மை கொஞ்ச நேரத்துக்கு முன்தான் கொடுக்கப்பட்டது என்று சொல்லவே அமரிக்கையடைந்தாள். அவளுடைய கடைசி வார்த்தைகளெல்லாம் தேவநற்கருணையைப் பற்றியதாகவே யிருந்தன. தன் பாடுபட்ட சுரூபத்தைப்பார்க்கத் தேடினாள். அதை அவளுக்குக் கொடுக்கவே திருப்தியடைந்தாள். ஒரே ஒரு பக்கமாய் அவள் அடிக்கடி உற்றுநோக்கிக்கொண்டிருந்தாள். ஏதோ ஒரு காட்சி கண்டாற்போல், "ஆ" என்று ஆச்சரிய சந்தோஷத்துடன் கூவினாள். பிறகு தன் படுக்கையருகே வைத்திருந்த சேசுவின் திரு இருதய படத்தின் பக்கமாய்த் திரும்பி, அதை அளவற்ற நேச உருக்கத்துடன்

பார்த்தாள். அதையும் பாடுபட்ட சுரூபத்தையும் அத்தியந்த பத்தியுடன் முத்தமிட்டாள். முத்துப்போன்ற இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் அவள் கண்களிலிருந்து உதிர்ந்தன. இவ்வாறு அவளுடைய அழகிய பரிசுத்த ஆத்துமம் யாதொரு போராட்டமுமில்லாமல் சர்வ அமரிக்கையுடன் பேரானந்தத்தில் மூழ்கி அவளுடைய திவ்ய பத்தாவின் சமுகம் சென்றது. ஆ! நமக்கு நீதிபரனாய் வரப்போகிறவருடைய இருதயத்தை ஓயாமல் நேசித்து வந்தபின் மரிப்பது எவ்வளவு பாக்கியம்! எவ்வளவு பேரின்பம்! மரிதாயார் மாலை 3-மணிக்கு மரித்தாள். சேசுவின் இருதயத் திருநாளின் முதல் மாலை கணிதச்செபம் (First Vespers) சொல்லப்படும் நேரமும் அதுவேயாம். மரிதாயாரின் கோரிக்கைகளையெல்லாம் சர்வேசுரன் கேட்டருளினார். ஏனெனில், அவள் விரும்பின பிரகாரம், சேசுவின் இருதயத் திருநாளன்று தேவநற்கருணை பிரசித்தமாய் ஸ்தாபகம் செய்யப்பட்ட வேளையில், பச்சாத்தாபப் பாலர்கள் தேவநற்கருணை ஆசீர்வாதத்திற்காக கோவிலில் வந்து கூடியிருந்த தருணத்தில்தான் சேசுவின் திரு இருதயத்தின் இச்செல்வ பத்தினி மரித்தாள்.

முற்றிற்று.

S. M.

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

51-ம் அதிகாரம்.

டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய இரு கரங்களையும் அபிராமி பிடித்துக்கொண்டு "இவர்தான் நமது பிள்ளை" யென்றாள்.

அந்நேரத்தில் டிக்ரூஸ் ஸ்வாமியார் போசனம் செய்து இளைப்பாறியபின் ஆஸ்பத்திரியிலிருக்கும் வியாதிக்காரனைப் பார்க்கும்படி அங்கு போய்ச் சேர்ந்தார்.

அப்போது வியாதிக்காரன்: ஆம், பிள்ளையை யெடுத்துக்கொண்டு ஓடிப்போனதை மன்னித்தாய், ஆனால் அந்தக் குழந்தையை நான் உனக்கு உத்தரியாமல் போனதற்கு என்ன? என அபிராமியம்மாள் வியாதிக்காரனைப் பார்த்து: நமது அருமையான பிள்ளை வந்து சேர்ந்துவிட்டது நமது வீட்டுக்கு.

"நம்முடைய பிள்ளையா?"

"ஆம்"

"சிலுவைதாஸனா?"

"ஆம்"

"வாஸ்தவமா?"

"சத்தியமாக"

"யார் கொண்டுவந்து விட்டார்?"

"சர்வேசுரனே"

"இப்போது எங்கே அந்தப் பிள்ளை?"

உடனே டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய கையை அபிராமியம்மாள் பிடித்துக்கொண்டு, "இவர்தான் நமது அருமையான பிள்ளை!"

"மெய்தானா அபிராமீ?"

"மெய்தான், இவருடைய இடதுகையின் சுண்டுவிரலைப் பாரும்" என்று அதை வியாதியஸ்தனுக்குக் காட்டினாள். மேலும் தங்கள் பிள்ளை கண்டுபிடிக்கப்பட்ட அற்புத விருத்தாந்தத்தையும் அவனுக்கு அறிவித்தாள்.

அப்போது வியாதியஸ்தன் ஸ்வாமியாருடைய கை இரண்டையும் பிடித்துக்கொண்டு, பலமுறை முத்திசெய்து, "சங்கைக்குரியஸ்வாமிகளே! என் பிரிய குமாரனே! சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தைப்பற்றி யோசிக்கும்போது, ஆ! அவர் எவ்வளவு தயையுள்ள தகப்பன்! எவ்வளவு நல்ல தகப்பன் அவர்" என்று கர்த்தரைப் புகழ்ந்து தோத்திரித்தான்.

அதன்பிறகு தனக்கு முன் நிற்கும் தன் மனைவி அபிராமியையும் தன் குமாரனாகிய டிக்ரூஸ் ஸ்வாமியாரையும் அன்புடன் கட்டிமினவி, பக்கத்தில் உட்காரச்சொல்லி பின்வருமாறு மொழிந்தான்:—

அபிராமீ! உத்தம மனைவீ! உன் மாறாப்பொறுமையினாலேயே, உன் உருக்கமுள்ள ஜெபத்தினாலேயே நமது நேச குமாரனையும் உன்னையும் இப்போது சாக்ஷாத்கரித்து, கண்குளிர உங்கள் முகத்தைப்பார்த்து பேசும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததென்பதற்கு கிஞ்சித்தும் சந்தேகமில்லை. உன் பக்தியுள்ள மன்றாட்டினாலேயே, பெருந்துரோகியான நான் இப்போது அற்புதமாய் மனந்திரும்பி சத்தியத் திருச்சபையில் சேர அதிர்ஷ்டமும் பெற்றேன்.

நமது கலியாணத்துக்கு முன்னும் அதற்குப் பிறகும் ஆறுமாதம் நான் சத்தியவேத கட்ட

ளைப்படி ஒழுகி, நாடோறும் திவ்ய பூசை கண்டு அடிக்கடி நன்மை வாங்கி நடந்தகாலத்தில், என் இருதயத்தில் உண்டான ஞான சந்தோஷமும் ஆறுதலும் இவ்வளவென்று வர்ணிக்க என்னால் இயலாது. அபிராமீ! அவ்வாறு இதுவரையில் நடந்திருப்பேனாகில், ஆ! எவ்வளவோ பாக்கிய வானாயிருப்பேன்! ஆனால் (பெருமூச்சுடன்) கெட்டேன், துஷ்டருடைய ஆலோசனையைக் கேட்டு கெட்டழிந்தேன். அவர்களுடைய துர் ஆலோசனையைப்பற்றி உன் இருதயத்தை ஆயிரம் வாளால் ஊடுருவினேன்! என் தாய் தந்தையரையும், உன் நல்ல தகப்பனாரையும், மன நோகச்செய்து குருவானவரைத் தூஷித்து, சத்யவேதத்தை யிகழ்ந்து, தேவதாயாரைத் தூஷணித்து, தேவத்திரவிய அனுமானங்களைப் பழித்து, பலதடவை தேவத் துரோகம் கட்டிக்கொண்டு கருணாம்பர கர்த்தருக்கு இரண்டகம் புரிந்து, மனிதருக்கு துர்மாதிரிகை காட்டி, ஒரு மிருகம்போல் நடந்தேன் (என்று சொல்லி அழத் தொடங்கினான்).

நாலைந்து மாதங்களுக்குமுன் நமது பிரிய குமாரனைத் தேவாதீனமாய்க் கண்டபோது, அவர் இன்னாரென்று அறியாவிட்டாலும், அவர் சொன்ன புத்தியால் என் மனம் உருகிற்று. என் பாவங்களின் கனகனத்தையும் அதன் அவலக்ஷணங்களையும் அறிந்துகொண்டேன். அவைகளுக்காக அழுது மனஸ்தாபப்பட்டேன். அதுமுதற்கொண்டு கள்ளர் கூட்டத்தைவிட்டு ஓடிப்போக சமயம்பார்த்துக்கொண்டிருந்தும் சந்தர்ப்பப்படவில்லை.

நாலு நாளைக்குமுன் திருடர் வழிப்போக்கரை மடக்கியடிக்கும்படி ரஸ்தா பக்கத்தில் பதுங்கியிருந்தார்கள். நானும் அவர்கள் கூட இருந்தேன். அப்போது நாலைந்து வண்டிகளைத் தாக்கும் சமயத்தில் எதிரில் அநேக வண்டிகள் வருவதைக் கண்டு அவர்கள் காட்டில் சென்று ஒளிந்துகொண்டார்கள். நானோ, இந்தப் பாபிஷ்டிகளுடைய கூட்டத்தினின்று ஓடிப்போக கருத்துகொண்டு கடைசி வண்டிக்குப்பின் நடந்து போனேன். அப்போது வண்டிக்காரர் நான் திருடனென்று சமுசயங்கொண்டு என்னை அடித்துக் காயப்படுத்திக் குற்றுயிராய் ரஸ்தாவில் போட்டுவிட்டுப் போனார்கள். இதுதான் எனக்குத் தெரியும்.

ஆனால் உங்கள் மூலமாய் அறிந்துகொண்டதுபோல சர்வேசுரனுடைய விசேஷ தயவால் நீங்களிருவரும் என்னைத் தூக்கி வண்டியில் வைத்துக்கொண்டுவந்து ஆஸ்பத்திரியில் விட்டீர்கள்.

என் பிரிய குமாரனே! சற்றுநேரத்துக்கு முன் என் நிர்ப்பாக்கிய ஆத்துமம் கட்டப்பட்டிருந்த சங்கிலிகளை உடைத்துவிட்டீர்! என் பாவக் காயங்களை முற்றும் ஆற்றிவிட்டீர்! தேவ விரோதியான என்னை சர்வேசுரனோடு சமாதானம்செய்துவிட்டீர்! ஆ! என் பாவமே! சபிக்கப்பட்ட பாவமே! ஆங்காரத்தாலும் அக்ஞைத கர்வத்தாலும் நான் கட்டிக்கொண்ட என் கணக்கற்ற பாவாக்கிரமதோஷங்களே! உங்களை பெண்முழு இருதயத்துடன் தொலைத்துவிடுகிறேன். சர்வ தயாபர சர்வேசுரன் எனக்கு மன்னிப்பு அளித்தாரென்று உறுதியாக நம்புகிறேன். இனிமேல் என் உயிர் இருக்குமட்டும் அப்பேர்ப்பட்ட பாவங்களைக் கட்டிக்கொள்ளேன். ஒருபோதும், ஒருக்காலும் என் உயிர் போனாலும் சபிக்கப்பட்ட அந்தப் பாவங்களுக்கு உட்படேன், (என்று பெருமூச்சுடன் தன் கையிலிருக்கும் பாடுபட்ட சுரூபத்தை அநேகவிசை பத்தி விசுவாசத்தோடும் கண்ணீர் பெருமூச்சோடும் முத்திசெய்துகொண்டிருப்பதை அவருடைய மனைவியாரும் குமாரனும் அங்கு கூடியிருந்தவர்களும் பார்த்து அதிசயித்துக்கொண்டிருந்தார்கள்.)

மறுபடியும் வியாதிக்காரன் தன் மனைவியை நோக்கி: "இவையெல்லாம், அதாவது அற்புதமாய் நமது குமாரன் வந்து சேர்ந்ததும், நிர்ப்பாக்கியனான என்னுடைய அற்புதத்துக்குரிய மனந் திரும்புதலும், நாம் மூவரும் இங்கு கூடி ஒருவர் ஒருவரைச் சந்தோஷத்தோடு பார்த்து சம்பாஷித்து களிப்பதும் உன் வேண்டுதலால் தான் அபிராமீ! என் நேச மனைவீ! உன் விடா ஜெபத்தாலும் சிந்தின கண்ணீராலுமே உண்டானது. இது சத்தியம். தயையுள்ள சர்வேசுரனுடைய கோபத்தை மாற்றிவிட்டது அபிராமீ! உன் ஜெபம்" என்று சந்தோஷக்கண்ணீர் உதிர்த்தான் வியாதிக்காரன்.

ஸ்வாமியாரைப்பார்த்து, "என் பிரிய குமாரனும் குருப்பிரசாதியுமாகிய ஸ்வாமீ! இப்போது என் இருதயத்தில் கிளம்பும் சந்தோஷானந்த பிரவாகத்தை வர்ணிக்க என்னால் மாளாது," என்றபின் சுரூபத்தைக் கையிலேந்தி, "ஆ! ஸ்வாமீ! என் சிநேகதேவனே! நீர் எனக்குக் கொடுக்கும் சந்தோஷ ஆறுதலையும் மனச் சமாதானத்தையும் என் இருதயம் இனி பொறுப்பது கூடாத காரியம். புதுமை! புதுமை!! என்கிறார்கள். இதை

விட வேறு புதுமை எனக்கு வேண்டியதில்லை. சர்வேசுரன் இன்னும் எனக்குப்புரிய சித்தங் கொண்ட இந்த உபகாரத்துக்காக நித்திய கால மாய் அவருடைய அளவற்ற, மட்டற்ற இரக் கத்தையும் கருணையையும் கொண்டாடிப் புகழ் வேன்" என்றான்.

இதற்குப்பின் அபிராமியம்மாள் தன் கண வனைப்பார்த்து, "நீர் எப்படி இத்தேசத்துக்கு வந்துசேர்ந்தீர்?" என்று கேட்டாள்.

வியாதிக்காரன் மறுமொழியாக பின்வரு மாறு சொன்னான்:—

அபிராமீ! நமது அருமைக் குழந்தையைத் திருடிக்கொண்டு போனபோது மதுபானத்தால் வெறிகொண்டிருந்தபடியால் அக் குழந்தைக்கு என்னால் என்ன தீங்கு நேரிட்டதென்று எனக் குப் புலப்படவில்லை. இதைப்பற்றி நான் அதிக விசனமும் துக்கமுங்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து சமயத்துக்குத் தகுந்தாற்போல வேதத்தை மாற்றிக்கொண்டு கெட்டலைந்தேன்.

பத்துவருஷத்துக்குமுன் என் துர்நடத்தை யின்பேரில் அருவருப்புகொண்டுநாகப்பட்டணத் துக்குப் புறப்பட்டுப்போய் (Ceylon Depot) சிலோனுக்கு ஆட்களை சேர்த்துவைக்கும் கிடங் கிற்குப்போய் என்னையும் அங்கு சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டதின்மேல், கண் காணி அதற்கு ஒப்புக்கொண்டான். 50 பேர் சேர்ந்தபின் எங்களைக் கப்பலேற்றி கொழும்புக் குக் கொண்டுபோய்ச் சேர்த்தான். கப்பலில் எனக்கு சீதபேதி கண்டிருந்தது. இனி தோட் டத்தில் நான் செய்ய இருக்கும் கூலிவேலையைப் பற்றி யெனக்கு திகிலுண்டானது. நாங்கள் கொழும்பிலிருந்து கண்டிக்குப் பிரயாணமான மூன்றாம்நாள் காலையில் வழியில் நடந்துபோகும் போது எனக்கு உண்டாயிருந்த சீதபேதியைப் பற்றி கண்காணிக்கு அறிவித்து, ரஸ்தா பக்கத் தில் ஒதுங்கி வருகிறேன் என்று அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, அங்குள்ள மரத்துக் குப்பின்னால் உட்கார்ந்தேன். அன்னேரத்தில் பெரிய கண்காணி வேறிருகண்காணிகளை யென் பின் அனுப்பி, என் வேலை முடிந்தபின் என்னை அழைத்துவரும்படி கற்பித்தான்.

நான் ரஸ்தாவை விட்டு மரத்தின்கிட்டப் போனபோது, அங்கிருந்து கொஞ்சம் கொஞ்ச மாய் நடந்துபோய் ஓர் பெரிய மரத்தின்மேல் ஏறிக்கொண்டேன். நான் வெகுநேரம் திரும் பாததைக்கண்ட கண்காணிகள் நான் ஒதுங்கின மரத்தண்டைக்குப்போய்ப் பார்த்து அங்கு என்னை காணாதபடியால் நாலாபக்கமும் வெகு நேரம் சுற்றித்திரிந்து காட்டைவிட்டு ரோட்டுக்கு வந்து மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள்.

அன்று மத்தியானமட்டும் மரத்தின்மேலி ருந்து, மத்தியானத்துக்குப்பின் இறங்கி யென் கண்ணுக்கு அகப்பட்ட பழம் காய் முதலியவற் றைப்பறித்துத் தின்றுகொண்டிருக்கும் சமயத் தில், பொறிக்கும் சட்டியிலிருந்து நெருப்பில் விழுவதுபோல சில திருடர் எனக்கு எதிராக வந்து என்னையும் அவர்கள் கூட்டத்தில் சேர்த் துக்கொண்டார்கள். இப்படி பத்து வருஷகா லம் கள்ளருடன் காட்டிலிருந்தபின் சில மாதங் களுக்குப் பிறகு நமது குமாரனாகிய ஸ்வாமியா ரைப் பார்க்க பாக்கியம்பெற்றேன் (என்றான் வியாதிக்காரன்.)

தாய், தகப்பன், பிள்ளை ஆகிய மூவரும் அன் னியோன்னியமாய்ப் பேசியபின் வியாதிக்கா ரன் ஸ்வாமியாரைப்பார்த்து சொன்னதாவது:

நிர்ப்பாக்கியத்துக்குரிய என் சரித்திரத்தை இப்போது நீர் அறிந்துகொண்டீர். உமது பக்தி யுள்ள மாதாவின் ஜெபதபத்தாலும் கண்ணீ ராலும் நரகவாயினின்று நான் தப்பித்துக் கொண்டேன். இப்போது சர்வ தயாபர சர்வே சுரனுடைய விசேஷ இஷ்டப்பிரசாதத்தின் உத வியால் என் துர்மார்க்கத்தை விட்டு அவர் காட் டிய சன்மார்க்கத்தில் சேர்ந்துகொண்டேன். மேலும் எனது அளவற்ற பாவாக்கிரமங்களுக் காக மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்கி றேன் என்று நம்பிக்கைகொள்ளுகிறேன். நான் சீக்கிரத்தில் இவ்வுலகத்தையும் உங்களையும் உங் கள் தாயாரையும் விட்டுப்பிரிய காலம் சமீபித்தி ருக்கிறதென்று விசனிக்கிறேன்.

தயையுள்ள சர்வேசுரன் எனக்கு இன்னும் சொற்ப ஆயுள்காலத்தை கட்டளையிட தயைபுரி வாராகில் நான் ஊர் ஊராய்ப்போய் மதுபா னத்தை விலக்குவதற்கான உபாயங்களை யெல் லாம் செய்வேன். என்னால் கெட்டு அந்தப்பாவத் தில் பழகியிருக்கும் என் பழய கூட்டாளிகளுக்கு நல்ல புத்திசொல்வேன். அவர்களை மனந்திருப்ப என்னாலான முயற்சியெல்லாம் செய்வேன்.

ஏனெனில் இந்த நிர்ப்பாக்கிய குடியால் விளையும் பாவாக்கிரமங்களை நான் என் பரீக்ஷை யால் ஸ்பஷ்டமாய் அறிந்திருக்கிறேன். யாதொ ருவன் ஒரு பாவத்தை கட்டிக்கொண்டு வருவானா

கில்: உதாரணமாக, பொய்யையோ, திருட்டையோ, விபசாரத்தையோ, வேறு எந்த பாவத்தையோ, செய்ய வழக்கப்பட்டு இருப்பானுகில் யாதொரு நல்ல புஸ்தகத்தை அல்லது புத்தி பிரசங்கத்தைக் கேட்டு அதை விட்டுவிடுவான். அல்லது பயத்தாலும், வெட்கத்தாலும், தன் குடும்பத்திலுண்டாகும் கஷ்ட நஷ்டத்தைப்பற்றியாகிலும் அந்தப் பாவத்தை விட்டு விலகுவான். அல்லது அந்தப் பாவத்தால் தனக்குண்டான வியாதியையும் தண்டனையையும் பற்றியாவது அந்தக் கெட்ட வழக்கத்தைத் தொலைத்துவிடுவான்.

ஆனுல் மதுபானத்தை உபயோகிப்பவர்களுடைய நடத்தை முழுதும் வேறுபட்டது. மதுபானியோ, ஐயையோ! அந்தப் பேய்த்தண்ணீரை உபயோகஞ்செய்யப் பழகினபின், ஆகாயத்திலிருந்து விழும் கோடை யிடிக்கும் பயப்படமாட்டான். இவ்வுலகிலுண்டாகும் எப்பேர்ப்பட்ட துன்பதுரிதமும் பொல்லாங்கும் அவனுடைய துர்ப்பழக்கத்தை மாற்றிவிடாது.

குருக்கள் முதலிய தெய்வ புருஷாள் சொல்லும் புத்திமதிக்கும் காது கொடாததுடன், அவர்கள் சர்வேசுரனுடைய கடின நீதியைப்பற்றியும் சாவைப்பற்றியும் கடவுளுக்கு அவன் கொடுக்க இருக்கும் கண்டிப்பான கணக்கைப்பற்றியும், நரகத்தின் முடியாத பயங்கரத்துக்குரிய ஆக்கினையைப்பர்றியும், வேறெவ்வகையான புத்திமதிகளும் விழலுக்கு இறைத்த நீர்போல அவன் இருதயத்தில் யாதொரு உணர்ச்சியையும் விளைவிக்காது!

குடியாலுண்டாகும் அவமானத்தை இலக்ஷியம் செய்யமாட்டான். அதினிமித்தம் சர்க்காரால் தண்டிக்கப்பட்டபோதிலும் பயப்படமாட்டான். அவனுடைய பெண்சாதி பிள்ளைகளுடைய கண்ணீர் அழுகையும் தரித்திர வறுமையும் பட்டினி உபவாசமும் அவன் மனதைக் கரைக்காது.

ஆ! இம்மட்டோடு போகவில்லை அப்பாவத்தின் கொடுமை! கையில் பணமிருக்குமட்டும் மனங்குளிரக் குடிப்பான். பணம் கையில் இல்லாத சமையத்தில் நிலபுலங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் ஈடுவைத்தோ, அருதிக்கிரயம் செய்தோ குடிப்பான். அதுவுமில்லாதபோது தன் பெண்சாதிப் பிள்ளைகள் காது கழுத்திலுள்ளதை விற்று திருப்தியாய்க் குடிப்பான். அது தீர்ந்தபின் வீட்டை அடமானம் வைத்து அந்தப் பசாசுத் தண்ணீரைக் குடிப்பான்.

எல்லா முடிந்தபின்னும், அந்த தாகம் தீருமோ? ஒருக்காலுந் தீராது. ஆகையால் பொய் சொல்லியோ, திருடியோ, சபிக்கப்பட்ட அப் பேய்த் தண்ணீரை அருந்துவான்.

ஆங்காங்கு நடக்கும் சண்டை சச்சரவிலும் அடிபிடி சண்டையிலும் வலிய தலையிட்டுக் கொண்டு அப்போதைக்கப்போது கையேந்துவான் இரண்டு அணு மூன்றணுவுக்கு! எப்பேர்ப்பட்ட பொய்ச்சாட்சிக்கும் அஞ்சாமல் முன்னுக்குப்போய் கேஸ்முடியுமட்டும் கக்ஷிக்காரன் கொடுக்கும் பணத்தைச் செலவுசெய்வான் மதுபானக்கடைகளில். நாய் எச்சிலுக்கு அலைந்து திரிவதுபோல, இப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியரும் மதுபான எச்சிலுக்காகத் திரிவார்கள். தேவனுக்கும் மனிதனுக்கும் பயப்படாமல் இராப்பகவாய் அலைந்து திரிவார்கள் சாகும்வரையிலும். நான் கண்ணாரப் பார்த்ததுபோல, மரண அவஸ்தை நேரத்திலும், நெஞ்சு அண்டபட்டு உயிர் விடும்போது முத்லாய்க் கையால் சயிக்கினை காட்டி தான் வழக்கமாய் உபயோகித்து வரும் மதுபானத்தைத் தன் வாயில் வார்க்கும்படி குடியர் கெஞ்சினுர்கள்!

ஐயையோ! புத்தியுள்ள மனிதன் எப்படி மிருகத்துக்குச் சமானமாய் விடுகிறுன் இந்தத் துர்ப்பழக்கத்தால்! இப்போது நான் பேசினதெல்லாம், யாராலாவது சொல்லக்கேட்டு, அல்லது புஸ்தகத்தில் வாசித்து அறிந்துகொண்டதல்ல. ஐயோ! என் பரீக்ஷையால் அறிந்திருக்கிறேன். இப்போது நான் விவரித்ததெல்லாம் ஒன்றும் தவறுமல் செய்தேன் நானும்.

ஆ! என் பாவமே! சபிக்கப்பட்ட பாவமே! (என்று மகா துக்கத்துடன் அழுவதைக்கண்டவர்களுடைய மனம் கரைந்து துக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.)

வியாதிக்காரன் பிறகு தன் மனைவி பக்கம் திரும்பி, "ஆ, அபிராமீ! என் நல்ல அபிராமீ! நான் செத்தபின் எனக்காக வேண்டிக்கொள்வதுடன், நிர்ப்பாக்கியனுன என்னைப்போல குடியில் பழகினவர்கள் மனந் திரும்பும்படிக்கும் வேண்டிக்கொள்ள மறவாதே.

"நீங்களும் எனது நேசமுள்ள குமாரராகிய குரு ஸ்வாமிகளே! சாகக்கிடக்கும் நான் கேட்கும் மன்ருட்டுக்கு இணங்கி அதை நிறைவேற்ற மன்ருடுகிறேன்.

"அது யாதெனில்: நீங்கள் சத்தியவேதம் போதித்து வரும்போது, சகல பாவத்துக்கும்

காரணமான இந்தக் குடியை மனிதர் விட்டு தொலைக்கும்படிக்கான உபாயங்களைத் தேட வேண்டும். மதுபானம் விலக்கும் சபைகளை யேற்படுத்தி, மதுபானத்தால் உண்டாகும் கணக்கற்ற பாவாக்கிரமங்களையும் அதனாலுண்டாகும் பொல்லாங்குகளையும் அவர்களுக்கு உணர்த்தி, சகலரும் மதுவிரோதிகளா யிருக்கும்படி முயற்சிக்க தங்களை மன்றாடுகிறேன். என் கடைசி மன்றாட்டு இதே" என்று தன் மனைவியையும் குமாரனையும் பக்ஷத்துடன் தழுவி முத்தமிட்டு, கடைசி தேவத்திரவிய அனுமானங்களை மகா பக்தி விஸ்வாசத்துடன் பெற்றுக்கொண்டு, மூன்றும் நாள் தன் பிரிய மனைவியினுடையவும் குமாரனுடையவும் அரவணைப்பில் சேசுமரியே சூசை என்னும் திருநாமங்களை உச்சரித்து உயிர் துறந்தான் சலமோன்.

மறுநாள் காலையில் சலமோனுடைய பிரேதம் சவப்பெட்டியில் ஸ்தாபிக்கப்பட்டு தேவாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அப்போது சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் தன் தகப்பனுருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பாட்டுப்பூசை செய்து ஒப்புக்கொடுத்தார். அவ்வூரார் அனைவோரும் பூசைகண்டு அதை அந்த ஆத்துமத்துக்காக ஒப்புக்கொடுத்தார்கள்.

அன்று சாயரட்சை குருமார் செய்யவேண்டிய சகல சடங்கையும் ஆரவாரத்துடன் செய்தபின், பிரேதம் கல்லறைக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு வேறொரு ஸ்வாமியாரால் இறந்தவனுடைய சரித்திர வரலாறு சகலருக்கும் பிரசங்கமூலமாய் வெளிப்படுத்தப்பட்டு, அந்த மனிதனுடைய அற்புத மனந்திரும்புதலுக்கும் பாக்கியமான மரணத்துக்கும் அவனுடைய மனைவியின் பொறுமையும் இடைவிடா ஜெபதபமுமே காரணமென்று சகலருக்கும் தெரியச்செய்தபின், சலமோனுடைய சடலம் திருச்சபை ஆசாரங்களுடன் கல்லறையில் க்ஷேமிக்கப்பட்டது.

தமது தகப்பனுரை அறிந்துகொண்டவுடனே டிக்ரூஸ் ஸ்வாமியார் தர்மானந்தபுரத்து பங்குஸ்வாமியாருக்கு தந்தியடித்து தெரியப்படுத்தினர்.

இந்த பாக்கியமான செய்தியைப்பற்றி அவ்வூரார் கேள்விப்படவே, இது புதுமை, பெரிய புதுமை, புண்யவதி அபிராமியம்மாளுடைய வேண்டுதலாலுண்டான அரிய புதுமை யென்று நிச்சயித்தார்கள்.

பவுல் போதகர் தன் குமாரனாகிய சலமோன் உயிரோடிருக்கிற சங்கதி அறிந்தவுடனே, கண்டிக்குப் பயணப்பட முயற்சி செய்தார். ரயில்வேஸ்டேஷனுக்குப்போய், பின்வருமாறு தந்தி சமாச்சாரத்தை சங். டிக்ரூஸ் ஸ்வாமியாருக்கு அனுப்பிவைத்தார். "இன்று சாயந்திரம் கண்டிக்குப் புறப்படுகிறேன். சலமோன் உயிரோடிருக்கிற சங்கதிகேட்டு மகிழ்ச்சிகொள்ளுகிறேன். என் மைத்துனனை பீற்றர் போதகர் லூர்துமாதா சரித்திரத்தை வாசித்தபடியால் அந்தப் பரிசுத்த கன்னிகையின் விசேஷ கிருபையால் ஆஸ்பத்திரியில் சாகக் கிடக்கும்போது மனந்திரும்பி சத்தியவேதத்தில் சேர்ந்து இன்று மரித்தார். இவரைப்பற்றிய சங்கதியெல்லாம் நான் அங்குவந்தபின் விவரமாய் அறிவிப்பேன். இப்படிக்கு பவுல்போதகர்."

இந்தச் சங்கதியை அறிந்த சங். டிக்ரூஸ் ஸ்வாமியாருக்கும் அவருடைய பிரிய தாயாருக்குமுண்டான சந்தோஷப்பெருக்கம் கொஞ்சமல்ல. சலமோன் மரணமான ஆறும் நாள் பவுல்போதகர் கண்டிக்குப்போய் சேர்ந்து தன் மகன் மனந்திரும்பின அற்புதமான வரலாற்றை அறிந்து சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்தினர்.

சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் தமது தாயாருடன் கண்டியில் கிறீஸ்துவர்களுடைய ஆத்தும ரக்ஷண்யத்துக்காக உழைத்துவருகிறார். இறந்துபோன தன் தகப்பனுருடைய மன்றாட்டை மறவாமல் மதுவிலக்குச் சபையைத் தமது பங்கிலெங்கும் ஸ்தாபித்து மகா அனுகூலத்துடன் உழைத்து வருகிறார்.

EASTER.

கர்த்தர் உயிர்த்த பண்டிகை.

நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தருளின திருநாளை நாம் இப்போது கொண்டாடிவருகிறோம். உயிர்த்தெழுந்தருளுவோமென்று ஆண்டவர் முன்னமேயே பலமுறை தெரிவித்திருந்தார். "தேவாலயமாகிய என் சரீரத்தை நீங்கள் அழிக்க, நானதனை உயிர்ப்பிப்பே" னென்றும் "ஜோனஸ் என்னும்

தீர்க்கதரிசியானவர் மூன்று நாள் திமிங்கிலத்தின் வயிற்றிலிருந்து புறத்தியில் வந்ததுபோல் மனுமகனும் மரித்த மூன்ரும் நாள் கல்லறையிலிருந்து உயிர்த்து எழுந்தருள்வா" ரென்றும் திருவுளம்பற்றி தாம் போதித்த வேதத்துக்கு தம்முடைய உயிர்த்தலை மறுக்கப்படா அத்தாட்சியாக யூதர்களுக்குத் தெரிவித்திருந்தார் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர்.

மூன்று வருடங்களுக்கு முன் தாம் உறுதியாக கூறியதை தாம் உயிர்த்த நாளன்று நிறைவேற்றிஞர் ஆண்டவர். அவர் உயிரோடிருக்கையில் குருடருக்குப் பார்வையையும், முடவருக்கு நடையையும், பேய் பிடித்தவர்களுக்கு விடுதலையையும், குஷ்டரோகிகளுக்கு முழு ஆரோக்கியத்தையும், மரித்தவர்களுக்கு உயிர் அளித்தல் முதலிய எண்ணிறந்த புதுமைகளையுஞ் செய்தார். கடவுள் மாத்திரம் புதுமைகள் செய்ய வல்லமையுடையவராதலால், அவர் செய்த புதுமைகள் யாவும் அவர் போதித்த வேதத்துக்கு அத்தாட்சியாம். சகல அத்தாட்சிகளையும்விட மேலான அத்தாட்சி அவர் உயிர்த்தெழுந்தருளினதேயாம். உயிர்த்தெழுந்தருளினதால் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் மெய்யான கடவுள் என்று தெரிய வருகின்றது. உயிர்த்தலாகிய அந்த புதுமையே சத்தியவேதத்தின் அஸ்திவாரமாகும். "கிறீஸ்துநாதர் உயிர்த்து எழுந்திருக்கவில்லை என்ருல், எங்கள் போதகம் வீண், எங்கள் விசுவாசம் வீண்" என்று அர்ச். சின்னப்பர் கூறுகிருர்.

சந்தோஷகரமான இந்தப் பரம இரகசியத்தை கிறீஸ்துவர்கள் யாவரும் இக்காலத்தில் கொண்டாடுகிருர்கள். இராஜ தீர்க்கதரிசியாகிய தாவீதென்பவர் "இந்நாள் ஆண்டவருடைய விசேஷமான நாள். மகிமைக்குரிய நாள். ஆண்டவர் உண்டுபண்ணின இந்நாளில் அகமகிழ்வோமாக, சந்தோஷப்படுவோமாக" என்று சங்கீதத்தில் பாடியிருக்கிருர்.

ஆதாம் விலக்கப்பட்ட கனியைப் புசித்ததிஞல் "மண்ணுய்ப் போவாய்" என்று கடவுள் சபித்த மானுட சரீரமானது ஆண்டவருடைய மாமிச உத்தானத்தால் பெருமை யடைகின்றது. துக்க சாகரத்தில் மூழ்கியிருந்த அவருடைய ஆத்துமம் இன்றையத்தினம் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. எகசாயமாயும் இரத்தமயமாயு மிருந்த அவருடைய சரீரமோ இந்நாளில் சூரியனைவிட அதிகமாய்ப்பிரகாசிக்கின்றது. உருக்குலைந்து நிறமாறி மனுஷருக் கியல்பான சாயலுமே யில்லாதவர் மனிதர் பெற்ற மக்களில் மிகவும் வடிவும் இலக்ஷணமும் அமையப்பெற்றிருக்கின்ருர். எல்லா ஜாதியாரும், எல்லா வகுப்பினரும் புறக்கணித்தவரை தேவதூதர்கள் வாழ்த்திக் கொண்டாடுகிருர்கள். துன்ப துரிதங்களுக்கும், மரணத்துக்கும் ஆளானவர் அக்ஷயம், இலகு, சூட்சமம், பிரகாசமாகிய இலக்ஷணங்கள் சம்பூரணமாய் அமையப்பெற்றிருக்கின்ருர். யூதர்களால் திரஸ்கரிக்கப்பட்டு சிலுவையில் அறையுண்டவர் விசேஷமான இந்நாளில் எல்லா ஜாதியாரையும் தமக்குச்சொந்தமாகவும் எல்லா இராச்சியங்களையும் தமக்கு உரிமையாகவும் தம்முடைய பிதாவினிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்.

ஆண்டவ ரடைந்த இந்த வெற்றி மகிமைக்கு சகல கிறீஸ்துவர்களும் பங்காளிகளா யிருக்கிருர்கள். ஆண்டவர் மகிமைப் பிரதாபத்தோடு உயிர்த்து எழுந்தருளினதுபோல, நாமெல்லோரும் உயிர்த்தெழுந்திருக்க வேண்டியது. ஆண்டவருடைய மாம்ச உத்தானம், நம்முடைய மாமிச உத்தானத்தின் முன்மாதிரி என்று அர்ச். சின்னப்பர் கூறுகிருர். ஏனெனில் ஆண்டவர் திருச்சபையின் தலைவராவர். நாம் திருச்சபையின் அங்கங்களாவோம். பிரதான உறுப்பாகிய தலையின் மகிமையால் மற்ற உறுப்புக்களும் மகிமையடையும்.

ஆதி மனிதனுகிய ஆதாம் விலக்கப்பட்ட கனியைப் புசித்ததிஞல் தன்னையும் தன்னுடைய சந்ததியாராகிய நம்மையும் பாவத்துக்கும் பாவத்திஞலுண்டான தண்டனையாகிய மரணத்துக்கும் உள்ளாக்கிஞர். இரண்டாம் ஆதாமாயிருக்கும் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய திருப்பாடுகளிஞல் நம்மைப் பாவத்தினின்றும் தம்முடைய மாமிச உத்தானத்தால் மரணத்தினின்றும் இரட்சித்தார். ஏனெனில் "ஒருவனுடைய கீழ்ப்படியாமையிஞல் சகல மனிதர் பேரிலும் ஆக்கினைத்தீர்ப்பு உண்டானதுபோல் ஒருவருடைய நீதியிஞலே சகல மனிதருக்கும் உயிர்தரும் நீதி உண்டாயிற்று" (உரோ. V., 18) என்று அர்ச். சின்னப்பர் கூறுகிருர்.

ஆதாமின் சந்ததியார் மாத்திரம் பாவத்துக்கும், பாவத்திஞல் வந்த தண்டனைக்கும் ஆளானதுபோல, நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய ஞான சந்ததியார் மாத்திரம், மாமிச உத்தானத்துக்கும் பேரின்ப பாக்கியத்துக்கும்

பாத்திரவான்களாவார்கள். ஆண்டவருடைய ஞான சந்ததியாராயிருக்க என்ன செய்ய வேண்டியதெனில், பாவத்தை விலக்கி ஆசாபாசங்களை யடக்கி கர்த்தரைப் பின் செல்லவேண்டியது. 'கிறீஸ்துவன்' என்னும் பேர் மாத்திரம் கொண்டிருப்பது போதுமானதல்ல. 'கிறீஸ்துவன்' என்னும் பேருக்குரிய நடக்கையும் கொண்டிருத்தலவசியம். நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் "நான் உங்களுடைய வழி" என்று திருவுளம்பற்றியிருக்கிறார். அவர் பெற்ற பெருமைக்கும் அடைந்த சந்தோஷத்துக்கும் பங்காளிகளாயிருக்க, அவர் சென்ற வழியிலேயே நாமும் செல்லவேண்டியது.—பிதாவாகிய சர்வேசுரன் தம்முடைய குமாரனைத் தமது வலதுபக்கத்தில் உட்காரச்செய்து அவரைத் தேவதூதர்களுக்கு தலைவராகவும் நல்லவர்களுக்குச் சம்பாவனையளிப்பவராகவும், கெட்டவர்களுக்கு தண்டனை விதிப்பவராகவும், பாவத்தையும், மரணத்தையும் அழித்தவராகவும், நியமித்திருக்கிறார். ஏனெனில் ஆண்டவர் பட்ட பாடுகளும், அடைந்த மரணமும் அந்த மகிமைப் பிரதாபத்துக்குக் காரணமாமே. "தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலாகி, மறுரூபமாகக் காணப்பட்டார். தம்மைத்தாமே தாழ்த்தி மரண மட்டுக்கும் அதாவது சிலுவை மரணமட்டுக்கும் கீழ்ப்படிதலுள்ளவரானார். அதினிமித்தம் சர்வேசுரனும் அவரை உயர்த்தி எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குச் சூட்டி, சேசுவின நாமத் திற்கு பரமண்டலத்தாரும், பூமண்டலத்தாரும், பாதாளத்தாருமாகிய சகலரும் முழந்தாட்படியிடவும் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பிதாவாகிய சர்வேசுரனுடைய மகிமையில் வீற்றிருக்கிறாரென்றும் எல்லா நாவும் அறிக்கையிடவும் பண்ணினார். (பிலிப். II. 9.10.11.) என்று அர்ச். சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதியிருக்கிறார். "கிறீஸ்துநாதர் இந்தப் பாடுகளைப்படவும் இவ்விதமாய்த் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையோ" வென்று எமாவுஸ் என்னும் கிராமத்துக்குப் போகிற சீஷர்களுக்கு ஆண்டவரே மொழிந்தார். ஆண்டவர் துன்பத்தின் வழியாகத்தான் கீர்த்தி, பெருமைகளை யடைந்தார். அவருடைய சீஷர்களாகிய நாமும் அதே வழியாகத்தான் மோட்ச பாக்கியத்தை யடையவேண்டியது.

ஆண்டவர் மத்தேயு சுவிசேஷத்தில் "யாதொருவன் என்பிறகே வர மனதாயிருந்தால் தன் சிலுவையைச் சுமந்து என்பிறகே வரக்கடவான் என்று திருவுளம்பற்றியிருக்கிறார். கடவுள் நமக்கு அனுப்புகிற சிலுவையைத் தோளில் சுமந்து மனந் தளராமல் கல்வாரி உச்சிவரையில் ஏறி, ஆண்டவருடைய சிலுவைக்குப் பக்கத்தில் நம்முடைய சிலுவையையும் நாட்டக்கடவோம். ஆசாபாசங்களோடு கூடிய பழய ஆதாமாகிய இந்தச் சரீரத்தைச் சிலுவையில் அறையவேண்டியது. ஆண்டவர் மரித்து உயிர்த்தெழுந்ததுபோல நாமும் இந்தத் தபசுகாலத்தில் நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் பாவத்தைத்தவிர்த்து கல்லறையாகிய ஆசாபாசங்களிலிருந்து உயிர்த்திருக்கின்றோம். ஆண்டவர் மறுபடியும் சாகமாட்டார். நாமும் இனிமேல் சாகக்கூடாது. அதாவது நாம் இப்போது கொண்டிருக்கும் ஞானஉயிராகிய தேவ இஷ்டப்பிரசாதத்தை சாவாகிய பாவத்துக்கடுத்த கிரியைகள் செய்யாமல் பத்திரமாய்க் காக்கவேண்டியது. அப்போஸ்தலர்களும் சீஷர்களும் உயிர்த்து எழுந்தருளின ஆண்டவரைக் கண்டு சந்தோஷமடைந்ததுபோல நாமெல்லோரும் மறு உலகத்தில் ஆண்டவரை முக முகமாய்க் கண்டு நீடுழிகாலம் களிகூர்ந்திருக்க பிரயாசபடக்கடவோம்.

S. L.

A MIRACULOUS VISION IN THE BATTLEFIELD.

போர்க்களத்தில் ஓர் அதிசய தரிசனம்.

இத்தாலியாவுக்கும் ஜெர்மனிக்கும் தற்போது நடக்கும் யுத்தத்தில் இத்தாலிய படைச் சேவகர்கள் சுரங்கங்களில் ஒளிந்திருந்து யுத்தம் புரிந்து வருகிறார்கள். ஒருநாள் இராவேளையில் ஒரு சுரங்கத்தின் மூலையில் மூன்று இத்தாலியா சேவகர் ஒன்றாகச்சேர்ந்து தங்கள் போசனத்தைப் புசித்துக்கொண்டிருக்கையில் திடீரென சற்றுயரத்தில் மனித உரு ஒன்றுகாணப்படவே சத்துருவந்துவிட்டானென்று திடுக்கிட்டு, நெருப்புக் குச்சியைக்கிழித்துப்பார்த்தபோது, அர்ச். ஐந்துகாயப் பிரான்சீஸ்கு சபை சன்னியாசிமார்களில் ஒரு

வர் நின்றுகொண்டு "உங்களுக்கு இரவுகால வந்தனம்" என்றதைக் கேட்ட சேவகர்களுடைய பயந்தெளிந்து "தரையெல்லாம் பனிக்கட்டியால் இருக மூடப்பட்டுக் கடுங்குளிரா யிருக்கும் இவ்வேளையில் நீர் எப்படி யிங்கே வந்தீர்?" என்று அவர்களி லொருவன் அவரை வினவினான். அப்போது சன்னியாசியார் "நான் தொலைதூரத்திலுள்ள ஒரு மடத்திலிருந்து வருகிறேன். பசியாயிருக்கிறது; ஏதாவது ஆகாரமிருந்து கொடுப்பீர்களானால் உங்களுக்குப் புண்யமாயிருக்கும்" என்றதற்கு "அதோ, அந்த மலைமேல் உங்கள் மடமிருக்கிறது. அங்கேபோய்ப் புசிக்கக்கூடாதா? மேலும் உங்கள் ஒழுங்கின்படி அன்னியர் எதிரில் நீங்கள் புசிக்கக்கூடாதல்லவா? அன்றியும் எங்களிடத்தில் அதிக உணவு இல்லை. ஆயினும் இதோ, இந்தக் காய்ந்த உரொட்டி யிருக்கிறது, இதைச் சாப்பிடும்" என்று ஒரு உரொட்டித்துண்டைக் கொடுத்தான். அப்போது சன்னியாசியார் "நான் வெகுதூரத்திலிருந்து வருகிறேன். சன்னியாசிகளில் யாராகிலும் பிரயாணம் செய்கையில் அவசரத்தினிமித்தம் சில ஒழுங்குகளை மீறினால் அது தவறல்ல" வென்று சொல்லிச் சேவகன் கொடுத்த உரொட்டித்துண்டை வாங்கி ஆவலுடன் புசித்தார்.

சன்னியாசியார் உரொட்டியைப்புசித்தானவுடன், "வாரும் உம்மை மடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் விடுகிறோம்" மென்று அந்த சேவகர்களில் இருவர் சொல்லி சுரங்கத்தினின்று வெளிப்பட்டு மலைமே லிருக்கும் மடத்துக்கு அவரைக் கூட்டிக்கொண்டுபோனார்கள். சிலவிசை இவர் ஜெர்மன்காரருடைய வேவுகாரரி லொருவரா யிருக்கக்கூடுமென்று அவ்விரு சேவகரும் தங்களுக்குள் வழியில் பேசிக்கொள்வதைக் கேட்ட சன்னியாசியார், "நான் இத்தாலியன்; அம்பிரியா ஊரில் பிறந்தவன். இத்தாலியா தேசத்தை என் முழு இருதயத்துடன் நேசிக்கிறேன்" என்றதைக் கேட்ட சேவகர் பயப்படாமல் சன்னியாசியாருடன் சம்பாஷித்துக்கொண்டு மடத்தை நோக்கிச் சென்றார்கள்.

அப்போது சேவகரில் ஒருவன் சன்னியாசியாரைப்பார்த்து, "நீர் இத்தனை சுரங்கங்களையும் படைகளையும் எப்படிக் கடந்து இங்கே வந்தீர்?" என்று கேட்க அவர் அதற்கு மறுமொழி கொடாமல் புன்னகைகொண்டார்.

"இந்தக் குரூர சண்டை எப்போது முடியும்?" என்று வேறொரு சேவகன் அவரைக் கேட்டபோது, "எப்போது முடியுமென்று யாருக்குந் தெரியாது. மனிதர் சர்வேசுரனை ஸ்நேகிக்க மறந்துபோவதால் யுத்தங்கள் உண்டாவதுண்டு; விசேஷ விதமாய் அவரை அறியக் கடமைப்பட்டவர்களே அவரை முற்றும் மறந்துவிட்டபடியால் இப்பெரும் ஆக்கினை யுண்டாயிருக்கிறது. சர்வேசுரனுடைய வழி இரத்தப்பிரவாக மூலமாயுங் கண்ணீர் மூலமாயுஞ் செல்லுகிறது. இவர்கள் ஒருவரைக் கொல்லும்போது தங்களையே கொல்லுகிறார்களென்று ஒருநாள் அறிந்துகொள்வார்கள். அப்போது மாத்திரம் சண்டை முடியும்"........என்றார். இதைச் சேவகன் கேட்டுச் சிரித்துக்கொண்டு, "இந்த வார்த்தைகளை நீர் போய் ஜெர்மனியருக்குச் சொல்லும்" என்றான். அதற்குச் சன்னியாசியார் "இரத்த மூலமாயும் கண்ணீர் மூலமாயும் சர்வேசுரனுடைய வழி செல்லுகிறதென்று ஜெர்மனியரும் ஒருநாள் அறிந்துகொள்வார்கள்" என்று பேசிக்கொண்டு போகையில் மடத்தின் வாசற்படியை வந்தடைந்தார்கள் மூவரும். அப்போது சன்னியாசியார் சேவகர் இருவரையும் நோக்கி "நீங்கள் வாசற்படியில் தொங்கும் மணியை அடித்து உள்ளே செல்லுங்கள். நான் மடத்தைச் சுற்றிக்கொண்டு போகிறேன்; என்னைப்பற்றி மடத்தாருக்கு ஒன்றும் சொல்லாதேயுங்கள்" என்றார். மணிச் சத்தத்தைக் கேட்ட வாசற்காக்கும் சன்னியாசியார் கதவைத் திறந்தபோது இரு சேவகர்களும் உள்ளே பிரவேசித்து, தங்களுக்குக் காட்டப்பட்ட படுக்கையில் படுத்து நித்திரை செய்தார்கள். அதிகாலையில் இருவரும் எழுந்தபின் மடத்து சிரேஷ்டருக்கு வந்தனோபசாரம் புரிந்து, கடந்த இராத்திரி தங்களுடன் மடத்துக்கு வந்த சன்னியாசியாரைப் பார்க்க மனதாயிருக்கிறதாகச் சொன்னதைக் கேட்ட அவர் அதிசயித்து, "கடந்த இராத்திரி எங்கள் மடத்தினின்று எந்தச் சகோதரரும் வெளியே போகவில்லையே" என்றார். அதற்குச் சேவகர் இருவரும் "இல்லை, இல்லை, ஒரு சந்நியாசியார் எங்களுடன் இங்கே வந்தார். இது நிச்சயம்" என்று சொன்னதின்மேல் சிரேஷ்டர் "அப்படியானால், இங்கே சற்றிருங்கள்; சகோதரர்கள் எல்லோரும் கோவிலில் செபம் செய்கிறார்கள். பிறகு அவர்களிந்த வழியாய்த்தான் வருவார்கள்; அப்போது உங்களுடன் வந்த சகோதரர் இன்னாரென்று கண்டுகொள்ளலா" மென்றார். அவ்வாறே சன்னியாசிகள் எல்லோரும் கோவிலி

விருந்து வெளிப்படும்போது அவ்விரு சேவகரும் சன்னியாசிகளைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு நின்று தங்களோடுவந்த சன்னியாசியாரைக் காணாததினால் விசனப்பட்டு, மறுபடியும் சிரேஷ்டரைக் கண்டு, தங்களுடன் வந்த சன்னியாசியாரைப் பார்க்கவில்லையென்று சொல்லி அவருடன் தாழ்வாரத்தில் உலாத்தி சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், ஒரு சேவகன், "அதோ இருக்கிறார் நாங்கள் பார்த்த சன்னியாசியார்" என்று சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைக் காட்டினான். "ஆமாம், இவர்தா" னென்று மற்ற சேவகனும் சாதித்தான். அப்போது சிரேஷ்டர் சிரித்துக்கொண்டு "இந்தப் படத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கிறவர் இறந்து 600-வருஷமாகிறது. இவர்தான் எங்கள் மடத்தை ஸ்தாபித்த பிதாவாகிய அர்ச். ஐந்துகாய பிரான்சிஸ்கு" என்றார். இதைக் கேட்ட இரு சேவகர்களும், மெய்யாகவே நாங்கள் ஒரு அர்ச்சியசிஷ்டவரைப் பார்க்கப் பாக்கியம் பெற்றோமென்று கூறி தங்கள் சுரங்கத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்]

ஓர் வேண்டுகோள்.

ஐயா,

1916—1917-ம் வருடத்திய "நல்ல ஆயன்" பத்திரிகைகள் வாயிலாய் "நாம் முன்னேறுவதெப்படி?" (How to raise our status?) என்னும் தலைப்பெயரிட்ட சில அருமையான வியாசங்கள் வெளியாயினவென்று சந்தாதாரர்கள் அறிவார்கள். அவ்வியாசங்கள் ஜாதிபேதம் பாராட்டாத இந்திய கிறீஸ்துவர்களுடைய மேம்பாட்டையே கருதி பிரசுரிக்கப்பட்டன. அவைகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு சிறு துண்டு புத்தகமாய் பிரசுரித்து சொற்ப விலைக்கு விற்பனை செய்தால் ஷை கிறீஸ்துவர்கள் அதை வாங்கி அடிக்கடி வாசித்து தங்களுடைய முன்னேற்றத்தின் மட்டில் அக்கரையும் ஆவலுங்கொண்டு அதை யடைய முயலுவார்களென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால் அடியிற் கையொப்பமிட்டிருக்கும் யான் ஷை வியாசங்களை அச்சிட்டு வெளியாக்கப் பிடிக்கும் செலவுக்காக ஏதாவது பொருளுதவிசெய்ய ஷை கிறீஸ்துவர்களுடைய மேம்பாட்டைக் கோருபவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். இவர்கள் கொடுத்துதவுவது எவ்வளவு சிறிதாயினும் மிக்க நன்றியறிதலோடு வரப்பெற்று "நல்ல ஆய" னில் அங்கீகரிக்கப்படும். இந்தப்பிரசுரத்தினால் ஏதாவது இலாபம் கிடைக்குமானால் அது "நல்ல ஆயன்" அபிவிருத்திக்கு நன்கொடையாக அளிக்கப்படும்.

C. V. தோமாஸ் பிள்ளை,
போர்மன்
ரோட்சைட் நெ. 1/118, வேளாள தேனும்பேட்டை, சென்னை.

19—3—1918.
தேனும்பேட்டை.

மதகண்டனம்.

ஐயா,

21-1-18 "சுதேசமித்திர" னில் "மதுரையில் பாதிரிமார்களின் செல்வாக்கு" என்ற தலைப்பெயரிட்ட வியாசத்தைப் படிப்போர் யாவரும் கிறீஸ்துவர்கள்மட்டில் இந்து சகோதரர்கள் எவ்வளவுக்கு துவேஷம் காட்டுகிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. இந்நாட்டில் பாதிரிமார்களுக்குக் கிடைத்துவரும் சௌகரியங்களை முற்றிலும் அகற்றிவிடவேண்டும் என்ற தீர்மானமும் செய்திருக்கிறார்கள். இவ்வித மதகண்டன மீட்டிங்குக்கு மதுரை முனிசிபல் சேர்மன் அவர்களே அக்கிராசனம் வகித்தார்கள். எவரும் தத்தமக்கு சம்மதமான எம் மதத்தையாயினும் தழுவிக்கொள்ளலா மென்பது காருண்ய பிரிட்டிஷ் இராஜாங்கத்தின் ஆக்ஞை. இப்படி யிருந்தும் 1-2-18ல் வெளியான சுதேசமித்திரனில் "திருச்சி இந்து காலேஜுக்குப் பொருளுதவி" என்ற வியாசத்தில் பாதிரிமார்கள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது விசனத்துக்குரியதே. இந்துக்களில் மெத்த பெரியவர்களும், கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களும், பாரதூர யோசனை யுள்ளவர்களுமான அநேகர் நமதாண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரைப் பற்றியும், நமது பரிசுத்த வேதத்தைப் பற்றியும் புகழ்ச்சியாய்ப் பேசியிருக்கிறார்கள். அவைகளிற் சில பின்வருமாறு :

ராஜாராம் மோஹனராவ்.—"வெகுகாலமாய் நான் செய்துவந்த மத ஆராய்ச்சியினால் எனக்குத் தெரிந்த வேறெந்த பிரமாணங்களைப் பார்க்கிலும் கிறீஸ்துவின் பிரமாணங்களே சன்மார்க்க விருத்திக்கும் மனிதருடைய புத்திக்கும் ஏற்றவையாம் என்று அறிந்துகொண்டேன்."

கேசவ சந்திர சேனர்.—“மான் நீரோடையை வாஞ்சித்துத் தேடுவதுபோல இந்தியா அநேக யுகங்களாக வாஞ்சித்து நாடியிருக்கிற ஏக ஐக்கிய பக்தித் தாகத்தைத் தீர்க்கவே கிறிஸ்து இந்தியாவிற்கு வந்துவிட்டார். இத்தாகம் தீர இந்தியா அனேக யுகங்கள் காத்திருந்தாலும் கடைசியாய்க் கிறிஸ்துவினுல் இது தீரும்.”

சர் நாராயண சண்டவர்க்கர்.—“கிறிஸ்துவின் ராஜ்ய சுவிசேஷம் இந்தியாவுக்கு வந்துவிட்டது. அது மாசற்ற நடக்கையில் பூரணமாய்க் காணப்படும்போது இந்தியாவின் ஜனங்களுடைய இருதயத்தைக் கவர்ந்து இழுத்துக்கொள்ளும் என்பதற்குச் சந்தேகமில்லை.”

மங்களூர் ஹிந்துமகான் ஒருவர்.—இயேசுவென்பவர் மனிதன்தானு அல்லவே கடவுளுமாம். நமது காலத்துக்கேற்ற அவதாரப் புருஷர் அவர்தான். ஆகையால் நாம் அவரை யேற்றுக்கொள்ளவேண்டும். அவர் நமக்கு அவசியம். அவரில்லாமல் நாம் பிழைக்க முடியாது.”

கிருஷ்ணபிள்ளை பாகவதர்.

“ அன்புமயமே கருணையானந்த வாரியே
  யருள்பொழி மழைக் கொண்டலே
ஆருயிர்க்குயிரான அமிர்த சஞ்சீவியே
  அடிய ரிதயாம் புஜத்தில்
இன்புறவதிந் திலகுமெஞ்ஞான பானுவே
  எத்தருஞ் சுகுண நிதியே
இதர சமயாதீத நிலயமே வானிழிந்
  திம்பர் வருஜீவ நதியே
மன்பதை புரக்க நடு நின்றேங்கு ரக்ஷணிய
  மாமேருவே யென்று நின்
வண்புகழ்வழுத்தி மெய் யன்பினேடு சிந்தைபர
  வசமாகி யாவியனல் கொண்
டென்புருகி யானந்த பாஷ்பஞ்சொரிந்துநின்
  றேத்த வருளீவ தென்றே !
ஏகநாயக சருவலோக நாயககிறீஸ்
  தியேசு நாயக ஸ்வாமியே !”

இவ்விதமாக கிறிஸ்துவேதமானது சர்வ சம்மதமாய் உலகமுற்றிலுமே இருபது நூற்றுண்டாய் அநுசரிக்கப்பட்டு வருகையில், இப்போது கிறிஸ்துவர்களென்றும் இந்துக்களென்றும் மதவிரோதம் ஏற்படக்கூடிய வியாசங்களைப் பத்திரிகைகளில் காண்பது தற்கால தேச முன்னேற்றத்துக்குத் தடையேற்படுமென்பதை கற்றோர் அறிந்துகொள்வர்.

A. V. FERNANDEZ.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

காலணு போஸ்ட் கார்டு.—இதை முதன் முதலாக ஆஸ்டிரியா தேசம் 1869 வருஷத்தில் உபயோகிக்கத் தொடங்கிற்றென்று சொல்லப்படுகிறது.

பிளேக்.—இவ் வியாதி இந்தியாவில் குறைவுபடாமல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சென்ற பெப்ரவரி மாதத்தின் முதல்வாரத்தில் இறந்தவர்களின் தொகை 31,198.

ஆங்கிலேய கத்தோலிக்குத் தளக்கர்த்தர்கள்.—சென்ற 1917-ம் ஆண்டில் 702 பேர் ஆங்கிலேய கத்தோலிக்குத் தளக்கர்த்தர்கள் யுத்தத்தில் மடிந்தார்களெனச் சொல்லப்படுகிறது.

எண்ணெக் கிணறுகள்.—இங்கிலாண்டில் சில எண்ணெக் கிணறுகள் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கஷ்டகாலத்தில் எண்ணெக் கிணறுகளால் மிக்கப் பிரயோசன முண்டாகுமென்று சொல்லத்தேவையில்லை.

பெருத்த நஷ்டம்.—பதுவா, திரவிசோ முதலிய இத்தாலியா நகரங்களின்மேல் சத்துருக்கள் வெடிகுண்டு பிரயோகஞ் செய்ததின் நிமித்தம், அந்நகரங்கள் மிக்கச் சேதப்பட்டுப்போனதுமல்லாமல் அநேக பிரமாண்டமான சிறந்த தேவாலயங்களும் அதிக நஷ்டப்பட்டுப்போயின.

மி. சங். கூர்மன் சுவாமிகள்.—இலங்கைத்தீவிலுள்ள காலி மேற்றிராசனத்தின் விக்கர் ஜெனரலாகிய ஷெ சுவாமிகள் திரேக சௌக்கியத்துக்காக கல்கத்தாவுக்குச் சென்றிருக்கையில் அவ்விடத்தில் தேக வியோகமானர். சர்வேசுரன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருள்வாராக.

தனிச் சமாதானம்.—ருஷியா தேசத்தாரும், ரூமேனியா தேசத்தாரும், பின்லன்ட் தேசத்தாரும் ஜெர்மன் தேசத்தாரோடு தனித்தனியாய்ச் சமாதானஞ்செய்துகொண்டார்களென்று தந்தி வழியாய்த் தெரியவருகிறது. இதனுல் இதுவரையிலும் அத் தேசங்களில் நடந்துவந்த ஜன சங்காரம் நின்றுவிட்டதாம்.

குழந்தை சேசுவின் திரேசம்மாள்.—இப் பரிசுத்த கன்னியாஸ்திரிக்கு முத்திப் பேறுபெற்ற பட்டங்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்காக அர்ச். பாப்பானவருடைய அனுமதியின்பேரில் செப்டம்பர்மீ அவளுடைய கல்லறை திறக்கப்பட்டு அவளது பிரேதம் பரிசோதிக்கப்பட்டது.

ஜேரிக்கோ பட்டணம்.—இப் பட்டணம் பலஸ்தின நாட்டிலுள்ளது. ஜெருசலேம் பட்டணத்தைக் கைப்பற்றிக்கொண்டபிறகு இப்பட்டணத்தையும் இங்கிலீஷ்காரரும் பிராஞ்சுக்காரரும் கைப்பற்றிக்கொண்டு ஜெயசீலராய் சத்துராதிகளைத் துரத்திக்கொண்டே முன்னுக்குச் செல்லுகிறார்கள். இவர்களுக்கு சர்வேசுரன் முற்றிலும் வெற்றியைத் தந்தருள்வாராக.

ஓர் அநியாயம்.—ஜெர்மனியர் பெல்ஜியத்தில் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய இரும்பு, எஃகு முதலிய லோகங்களாற் செய்யப்பட்ட யந்திரங்களையும் கருவிகளையும் தங்கள் தேசத்துக்குக் கொண்டுபோவதாகவும், அப்படி எளிதிற் கொண்டுபோகக் கூடாதவைகளை, இனி அவைகள் பிரயோசனப்படாவாறு, உடைத்துப்போடுவதாகவும் சொல்லப்படுகிறது.

மீன் பிடிக்க ஒரு உபாயம்.—நார்வே தேசத்தார் ஒருவித புதிய யந்திரம் கண்டு பிடித்திருக்கிறார்களாம். இந்த யந்திரத்தின் ஒரு பாகத்தைத் தண்ணீரில் போட்டு மற்றொரு பாகத்தைக் காதில் வைத்துக்கொண்டால் மீன்கள் ஏராளமாய் நடமாடுமிடத்தில் ஏற்படும் சத்தத்தைக் கேட்டு அவ்விடஞ் சென்று மீன்களைப் பிடித்துக் கொள்ளலாமாம்.

ஓர் யதார்த்தவாதி.—ஆஸ்ட்ரேலியா தேசத்தில் புரோடஸ்டான்டு சபை ஒன்றுண்டு. அதன் இரண்டாவது பிரசிடன்ட் ஸ்தானத்தை வகித்துவந்த மர்ரே என்பவர் தமது சபையார் எப்போதும் கத்தோலிக்கர் பேரில் அநியாய குற்றங் குறைகளைக் கூறிவருகிறார்களென்றறிந்து, தமது பிரசிடன்ட் ஸ்தானத்தை ராஜிநாமா செய்துவிட்டதுமல்லாமல், அந்தச் சபையின்பேரில் வெறுப்புற்று அதையும் விட்டு நீங்கிக்கொண்டார். இதுவே யதார்த்த வாதியின் குணம்.

தாடியுள்ள ஓர் ஸ்திரீ.—பிரான்சு தேசத்தில் 62 பிராயமுள்ள ஒரு ஸ்திரீ யிருக்கிறாளாம். இவளுடைய 50-வது பிராயத்தில் இவளுக் கோர்வித வியாதியுண்டானது. அதுமுதல் அவளுடைய அங்கங்கள் மாறுபாடு அடையலாயினவாம். இவளுடைய தலைமயிரெல்லாம் உதிர்ந்து தாடி வளர்ந்து இடுப்புவரையிலும் தொங்குகின்றது. அவளிடத்திலுண்டான இம் மாற்றத்துக்கான காரணம் வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கக் கூடவில்லையாம்.

அக்கினியாலுண்டான பெருஞ்சேதம்.—ஸ்பேயின் தேசத்தரசராகிய 13-ம் அல்போன்சோ என்பவருக்கு பல அரண்மனைகளுண்டு. அவைகளுக்குள் கிராஞ்சாவென்னும் நகரிலுள்ளதே மிக்கச் சிறந்தது. இது இத்தேசத்தின் தலைநகராகிய மட்டிரிட்டுக்கு 60 மயில் தூரத்திலுள்ளது. இது எப்படியோ இரவில் நெருப்புப்பிடித்து முற்றிலுமே எரிந்துபோயிற்று. இதை யவிக்க எவ்வளவுதான் பிரயாசப்பட்டும் கூடவில்லை. இதில் புராதன சித்திரப்படங்களும் அருமையும் விலை யுயர்ந்ததுமான தட்டு முட்டுகளும் வைக்கப்பட்டிருந்தன.

ஆனரபில் திவான்பஹதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளை.—நெல்லூர் கலெக்டரான நமது திவான்பஹதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளை யவர்கள் சென்னை கவர்ன்மெண்டு ஹோம் செக்ரெட்டெரியாகிய ஆனரபில் இராமச்சந்திரராவ் அவர்களுக்குப் பதில் ஒரு மாதம் அலுவல் பார்க்க நியமனம் பெற்றார்களெனக் கேள்வியுற்று சந்தோஷமானோம். இப்பதவியை மாத்திரமன்று இன்னும் அதியுந்நத பதவியையும் மிக்க கீர்த்தியுடன் நிர்வகிக்கத்தக்க திறமையும், சக்தியும், பெருந்தகைமையும் வாய்க்கப்பெற்ற இப்பெருமானைக் கடவுள் மேன்மேலும் உயர்த்துவாராக!

குடி இந்தியாவில் வருஷா வருஷமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.—சென்ற வருடம் பூனா டிஸ்டிரிக்ட்டில், கள், சாராயக்கடைகள் ஏலம் போடப்பட்டபோது ஒருவன் அவைகளை 75,000 ரூபாய்க்கு எடுத்துக்கொண்டான். இவ் வருடமோ அவைகள் 5 இலட்சம் ரூபாய்க்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. கடந்த வருடம் 3,500 ரூபாய்க்கு ஒரு கடையும் 6,000

ரூபாய்க்கு வேறொரு கடையும் ஏலத்தில் எடுக்கப்பட்டிருக்க, இவ்வருடம் அவைகள் முறையே 32,000 ரூபாய்க்கும், 52,200 ரூபாய்க்கும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படியாக இந்தியாவில் எங்கே பார்த்தாலும் குடி அதிகரித்து குடிகளுக்குக் கஷ்டத்தை விளைவித்துவருவது மிக்க விசனிக்கத்தக்கதே.

மி. சங். செராபினி கர்தினால் ஆண்டவர்.—அஞ்ஞான தேசமாகிய நம்முடைய இந்தியா தேசமானது விசுவாச பரம்புதல் சபையின் கண்காணிப்பிலும் ஆதரவிலுமிருந்து வருகின்றது. இந்தச் சபைக்குத் தலைவராயிருந்த ஷெ கர்தினாலாண்டவர் சென்றமீ ஊரோமாபுரியில் தம்முடைய 63-ம் பிராயத்தில் மரணமாயினாரென்று கேள்வியுற்று மிக்க விசனிக்கிறோம். சர்வேசுரன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட நாமெல்லோரும் நம்முடைய ஜெபத்தில் வேண்டிக்கொள்வோமாக. இவருக்குப் பதிலாக ஷெ சபைக்குத் தலைவராய் மி. சங். வான் ராஸ்ஸம் கர்தினாலாண்டவரவர்கள் அர்ச். பாப்பானவரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் உலாந்தா தேசத்தார். இவர் திடக்காத்திரராய் தீர்க்காயுள்கொண்டு தம்முடைய உந்நத பதவியை வகித்திருக்கச் சர்வேசுரன் கிருபைபுரிவாராக.

மனந்திரும்பின இரு பெருமாட்டிகள்.—இங்கிலாந்தில் அநேக பெருமான்களும் பெருமாட்டிகளும் இக்காலத்தில் தங்களுடைய புரோடஸ்டாண்டு மதத்தை விட்டுவிட்டு, கத்தோலிக்கராகி வருகிறார்களென்கிற சந்தோஷ சங்கதியை நாம் அடிக்கடி கேள்விப்பட்டுவருகிறோ மல்லவா? இப்போது சமீபத்தில் வேறு இரு பெருமாட்டிகள் சத்தியவேதத்திற்சேர பாக்கியம் பெற்றார்கள். அவர்களில் ஒருவர் இங்கிலாந்தில் யுத்த மந்திரியாயிருந்து சில மாதங்களுக்குமுன் இறந்துபோன லார்ட் கிச்சினருடைய சகோதரரின் குமாரத்தியாவர். இன்னொருவர் ஆடல் பாடலில் மிக்க பிரக்கியாதி பெற்று விளங்கிய லாவெல்லியர் என்னும் பெருமாட்டி. இவ்வம்மையார் தம்மிடமிருந்த விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை யெல்லாம் தம்முடைய சிநேகிதர்களுக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டு கன்னியாஸ்திரியாக ஒரு கன்னியாஸ்திரி மடத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

ஓர் நல்ல செய்தி.—போர்த்துகல் தேசத்தில் சில வருடங்களுக்குமுன் ஒரு கட்சிக்காரர் குழப்பங்களையும் புரட்சிகளையுமுண்டாக்கி, தங்கள் அரசனையுந் துரத்திவிட்டு, மேற்றிராணிமார்களையும் குருக்களையும் பரதேசம் போகச்செய்து, சத்திய வேதத்துக்கு விரோதமான சட்டங்களையுண்டாக்கி, தங்கள் தேசத்தை அதன் தற்காலத்திய நிர்ப்பாக்கிய நிலைமைக்குக் கொண்டுவந்தார்களென்பதைப்பற்றி நண்பர்கள் அறிவார்கள். ஆனால் தற்போது ஏற்பட்டிருக்கும் புது துரைத்தனத்தார் தங்களுக்குமுன் துரைத்தனஞ் செய்துவந்த பிரஜாதிபதியின்பேரிலும், மந்திரிமார்கள்பேரிலும் பல பெரிய குற்றங்களைச் சுமத்தி, அவர்களை மறியல்செய்துவைத்திருக்கிறார்கள். மேலும் பரதேசத்துக்கனுப்பப்பட்டிருந்த மேற்றிராணிமார்களையும் குருக்களையும் மறுபடியும் தத்தம் விசாரணைக்கு வரச்செய்து தங்கள் அலுவலைச் செய்யவும் அநுமதி யளித்திருக்கிறார்கள். முன்போல இந்த தேசம் மறுபடியும் ஒரு நல்ல கத்தோலிக்குத் தேசமாகும்படி சர்வேசுரன் கிருபை புரிவாராக.

துலுக்கருடைய துராகிர்தம்.—ஜெருசலேம் பட்டணம் ஆங்கிலேய தளக்கர்த்தன் அல்லென்பியின் வசமாவதற்கு முந்தி, துலுக்கர் அத் திரு பட்டணத்தை நாசமாக்காவிட்டாலும், அவ்விடத்திய தேவாலயத்தில் தேவதுரோகமான கிரிகைகளைக் கட்டிக்கொண்டதாகத் தெரியவருகிறது. அதெவ்வாறெனில், அவர்கள் திருநகரைவிட் டகலும்போது தங்களுடன் அநேக துறவிகளைக் கட்டாயப்படுத்திக் கூட்டிக்கொண்டுபோனதாகவும், அவர்களுக்குள் ஒரு குருவானவரை அவர்கள் படுத்திவைத்த இமிசைகளால் அவர் வழியிலேயே உயிர் துறந்ததாகவுந் தெரியவருகிறது. மேலும் திருக்கல்லறைக் கோவிலிலிருந்த அநேக கோடி ரூ பெறுமான பொக்கிஷங்களைப் பேர்லீன் நகருக்கு அனுப்பிவிட்டார்கள். அப்படி அனுப்பப்பட்டவைகளுக்குள் ஒரு கதிர் பாத்திரமாத்திரம் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ளது. அது அருமையான விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டு இத்தாலியா தேசத்

தரசனுன 3-ம் விக்டர் எம்மானுவேல் என்பவரால் திருக்கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டிருந்தது.

சென்னையில் ஒரு புது சத்திரம்—சென்னை எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக் கருகாமையில், மகா பேர்பெற்ற பரோபகாரியாகிய ஸ்ரீமான். ராவ்சாகேப் கண்ணன் செட்டியார் அவர்களால் உதவப்பட்ட சத்திரம் ஒன்று சென்றமீ 25-ம் தேதி மாட்சிமை தங்கிய சென்னை கவர்னர் அவர்களால் திறக்கப்பட்டது. சென்னை "பீப்பில்ஸ் பார்க்" என்னும் ஜனசிங்காரத் தோட்டத்துக் கெதிரிலுள்ள சர். சவலை ராமசாமி முதலியார் சத்திரத்தில் திரளாய் வரும் ஜனங்களுக்கு பலதடவைகளில் இடம் போதாமையாயிருத்தலால், இப் புது சத்திரம் சென்னைக்குவரும் பிரயாணிகளுக்கு ஒரு பேருபகாரமாம் என்பதற்குத் தடையென்ன? கத்தோலிக்குச் சகோதரர்கள் களிப்புடன் தங்கி யிருக்கத்தக்க கத்தோலிக்கு சத்திரம் எப்போது ஏற்படுமோ அறியோம். ஷெ கண்ணன் செட்டியாரைப் போன்ற காருண்ய பிரபு கத்தோலிக்கரிற் கிடையாதோ?

ஜான் ரேட்மன்ட் என்பவரின் தேகவியோகம்—ஐர்லாந்து தேசத்து துரைத்தன விஷயத்தில் வேறு வேறு அபிமானங்கள் கொண்டு பல வகுப்புகளாகப் பிரிந்திருக்கும் ஐரிஷ்காரருக்குள் பிரதான வகுப்பாருக்கிவர் தலைமையானவர். இவர் சிறந்த கத்தோலிக்கராய் விளங்கினது மன்றி, சொற்சுவை பொருட்சுவை நிறைந்த உபந்நியாசியு மென்று பெயர் பெற்றிருந்தார். இவருடைய சாமர்த்திய திறமையிலும் வாய்ச்சாலகச் சக்தியிலும் எவ்வளவு செல்வாக்குடையவரா யிருந்தாரென்றால், இவர் ஐர்லாந்துதேசத்தின் கிரீடந்தரியாத அரசரென்றழைக்கப்பட்டுவந்தார். லண்டன்மாநகரில் இவர் சமீபத்தில் காலமானபோது இவருடைய சவப்பெட்டி வெஸ்ட் மின்ஸ்டர் அதிமேற்றிராசன தேவாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பெரிய பாடற்பூசை செய்யப்பட்டபோது, நமது சக்கரவர்த்தி ஜார்ஜ் அரசர் தம்முடைய ஸ்தானாதிபதிகளை அவ்வாலயத்துக்கு அனுப்பினார். சக்கரவர்த்தியின் தாயாரும், முதல்மந்திரியும், வேறு இராஜாங்கத்தாரும், மற்றப் பிரபுக்களும், பார்லிமென்டு மெம்பர்களும், படைத்தலைவர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் அங்கு விஜயஞ் செய்திருந்தார்கள். தேவாலயத்தின் பெரிய வாசற்படியில் சக்கரவர்த்தியுடையவும் பாப்பரசருடையவும் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.

ஓர் நாய் பெற்ற சீதனம்.—உருஷிய இராஜகுமாரி யொருவள் தான் சாகுந்தறுவாயில், தன் மரணசாதனத்தில் தான் மிக அருமையாய் வளர்த்துவந்த நாய்க்கு சீதனமாக நாற்பதினாயிரம் ரூபாய் எழுதி வைத்தாளாம். அந்நாயின் பேர் "கிப்சி." இதுவும் தன் எஜமாட்டி யிறந்த ஆறும் மாதத்தில் இறந்துபோயிற்று. இது ஈன்ற குட்டியை வளர்த்துவந்த ஒருவர், ஷெ "கிப்சி" க்குச் சொந்தமான நாற்பதினாயிரம் ரூபாயை, அதன் குட்டி சுதந்தரிக்க பாத்தியதை யுண்டு என்று நியாய சபையில் வழக்கு கொண்டுவந்தார். நியாயாதிபதிகள் இந்த அபூர்வமான வழக்கை எப்படித் தீர்ப்பது என்று வெகுவாய் திகைப்புண்டு, கடைசியாய் "நாய்களுக்கு சொத்து சுதந்தரங் கிடையாது" என்று தீர்மானஞ் செய்தார்கள். "நாய்க்கு ஒரு சூலா அதற்கொரு மருத்துவமா" என்னொரு பழமொழி வழங்குகின்றது. இனி "நாய்க்கு ஒரு சொத்தா அதற்கொரு சுதந்தரமா" என்னும் இன்னொரு பழமொழியும் வழங்கலாம்போலும்.

ஓர் பாதிரி தண்டிக்கப்பட்டார்.—இங்கிலாண்டை யடுத்த "அயில் ஆப் மான்" என்னும் மனிததீவிலுள்ள ரெவரெண்டு ஜியார்ஜ் ரீட் என்னும் வெஸ்லியன் மிஷன் பாதிரியாரொருவர் மதுவிலக்கைப்பற்றித் தாம்செய்த பிரசங்கம் ஒன்றில் இராணுவ சேவகர்கள் அபரிமிதமான மதுபானம் செய்கிறார்களென்றும், அதைப்பற்றியவர்களுக்கு என்ன சொல்லினும் அவர்கள் திருந்துகிறார்களில்லையென்றும், அவர்கள் திருந்துகிறவரையில் கடவுள் இவர்கள் கப்பலை கடலில் அமிழ்த்திக்கொண்டு வந்தால் நலந்தானென்றுஞ் சொன்னதற்காக அவர் நியாயாதிபதியால், மூன்று மாதம் கடுங்காவல் விதிக்கப்பெற்றாராம். "பேசப்போகிறாயோ சாகப்போகிறாயோ" என்பதை இப்பாதிரியார் அறியார்போலும்.

காக்கைக்கு இம்சை.—செய்ததற்காக கொழும்பில் அஸ்ஸன் என்பவன் 20 ரூ. அபராதம் விதிக்கப்பெற்ருன். அவன் சிறகு ஒடியப்பெற்ற ஒரு காகத்தைக் கடல் ஜலத்தில் பலவிசையெறிந்து விளையாடிக்கொண்டிருந்ததற்காகவே ஷெ அபராதம் விதிக்கப்பட்டது. "பிள்ளைகளுக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது" என்றபடி ஜீவஹிம்சை செய்வது அடாது. யாதோர் பிரயோஜனத்துக்காக ஜீவஜெந்துக்களை ஒரு மட்டாய்க் கொன்றுவிடலாமேயல்லாது, இவைகளுக்கு சித்திரவேதனை செய்வது ஜீவகாருண்யமாகாது.

மகாப் பெரிய டைப்ரைட்டர்.—அமெரிக்காவிலே ஒரு டைப்ரைட்டர் கம்பெனியார் மகாப் பெரிய டைப்பர் ஒன்று செய்திருக்கிறார்களாம். இந்த டைப்ரைட்டரைச் செய்ய அவர்களுக்கு 2 வருஷம் பிடித்ததுமல்லாமல், 3 லட்சரூபாயும் செலவாயிற்ரும். இது 21 அடி அகலமும் 15 அடி உயரமுமுள்ளது. இதில் அச்சடிக்க 9 அடி அகலமுள்ள கடுதாசியும் 3 அங்குலம் உயரமுள்ள எழுத்துக்களும் தேவையாம். ஒவ்வொரு எழுத்துக்குமுள்ள இடைவெளி 2 அங்குலம். இந்த மெஷினில் அச்சடிக்க இதற்குப் பக்கத்தில் இன்னொரு சிறிய மெஷினை வைத்து, இரண்டுக்கும் மின்சார சம்பந்தம் ஏற்படுத்தி, சிறிய யந்திரத்தில் டைப் அடிக்க, பெரிய யந்திரமும் அச்சடிக்குமாறு இயற்றப்பட்டிருக்கிறதாம். இந்த டைப்ரைட்டர் 30 அடி நீளமும் 25 அடி அகலமும் 25 அடி உயரமுமுள்ள ஒரு அறையில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஓர் கணித மேதாவி.—கணித சாஸ்திரத்தில் மிக திட்ப நுட்ப அறிவும், அவ்வறிவை மேலும் மேலும் வளர்க்க அளவற்ற ஆசையும் ஆவலும் அமையப்பெற்ற, மிஸ்டர் எஸ். இராமாநுஜம் என்னும் சென்னைக் கல்விமானெருவர், சென்னைச் சர்வகலாசாலை அத்தியட்சர்களின் உபகாரச்சம்பளம் பெற்று, தற்போது இங்கிலாந்திலுள்ள பேர்போன கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் கணித நூல் பயின்று வருகின்ருர். அக் கலாசாலையில் இவர் காட்டிய நுட்ப அறிவைக் கண்டு மெச்சி, அதன் அதிகாரிகள் அவருக்கு, எப். ஆர். எஸ். என்னும் அபிமானப்பட்டம் அளித்திருக்கிருர்கள். "மன்னர் பெருமை துன்னும் பெரியோன்" எனப்பொருள் படும் "பெல்லோ ஆப் ராயல் சொசையிற்றி" என்னும் இக்கௌரதாப்பட்டம் அளிக்கப்பெற்ற இந்தியர் இவர் ஒருவர்தான். இவரால் இந்தியா முழுவதும் பெருமை பெறலாயிற்று. இவர்போன்ற மேதாவிகள் இன்னு மனேகர் வெளிக் கிளம்பினுலன்றோ நம் நாடு பெருமை பெற்றிலங்கும்!

விளம்பரம்.—சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த நெல்லூர் ஜில்லா, சூளூர்பேட்டையில் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கும் அர்ச். அந்தோனியார் ஆலயம் நாளது மீ 7உ ஞாயிற்றுக்கிழமையன்று மிகவும் வந்திக்கத்தக்க சென்னை அதிமேற்றிராணியாராகிய அருளப்ப ஆலன் ஆண்டவரவர்களால் மந்திரிக்கப்படும். பிறகு அதிமேற்றிராணியாரவர்களால் அவ் வாலயத்தில் திவ்யபூசை செய்யப்பட்டு உறுதிப்பூசுதலெனும்தேவத்திரவிய அநுமானமும் நிறைவேற்றப்படும். அடுத்த நாளாகிய 8உ அதிமேற்றிராணியாரவர்கள் ஆரம்பாக்கத்திலுள்ள பொருத்தனைக் கோவிலுக்குத் திருயாத்திரையாய் வரும் கிறீஸ்துவர்களுடைய வசதிக்காகக் கட்டப்பட்டிருக்கும் சத்திரத்தை மந்திரித்து ஷெ கோவிலில் திவ்யபூசை செய்து உறுதிபூசுதல் கொடுப்பார். இவ்விரு சுபதினங்களிலும் ஷெ ஆலயத்துக்கும் சத்திரத்துக்கும் பொருளுதவி புரிந்த ஸ்திரீ பூமான்களனைவரும் அங்கு வந்து விஜயஞ் செய்யுமாறு ஷெ ஆலயங்களின் விசாரணைக்குருவாகிய சங். S. M. F. இன்னுசிநாத சுவாமிகள் அவர்களை மனப்பூர்வமாய்க் கேட்டுக்கொள்வதுடன் அவர்களெல்லோருக்கும் தம்முடைய ஆழ்ந்த நன்றியறிதலையுங் கூறுகிருர்.

புரத்தாக்குடி பங்கில் தியான ஒடுக்கம்.—ஆண்களும் பெண்களுமாக 135-பேர் உள் தியானமும், சுமார் 40-பேர் வெளித் தியானமும் மார்ச்சுமீ 19உ சாயந்திரம் ஆரம்பித்து 23உ காலை திவ்ய பூசையோடு முடித்தார்கள். திருச்சி R. C. டிரேய்னிங்ஸ்கூல்மானேஜர்சங்.கோமெஸ் சுவாமியவர்கள் தியானப்பிரசங்கம் செய்தார். அவருடைய வல்லமையுள்ள ஞான

போதகங்களால் உண்டான பலன் மெத்த. கடைசி நாள் பூசைக்குப் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதத்துக்குமுன் எல்லோரும் தங்கள் குடும்பங்களை சேசுவின் திரு இருதயத்துக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்கள். சென்ற வருஷமும் இவ் வருஷமும் இவ்வூரில் நடைபெற்ற தியானங்களால் விளைந்த அளவற்ற நன்மைகளுக்காக திரு இருதய ஆண்டவருக்கும் அவருடைய பரிசுத்த தாயாருக்கும் தோத்திரமுண்டாகக்கடவது.

ஓர் பிழை திருத்தம்.—மார்ச்சு மாத "நல்ல ஆயன்" 72-ம் பக்கத்தில் வெளியாயின ஜனன அறிக்கையி னடியிற் கையொப்பமிட்டிருக்கிறவருடைய பெயரை "ஜோசப்" என்பதற்குப் பதிலாய் "ஜேகப்" என்று வாசிக்கவும்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

ஸ்ரீமான் ஜோசப் சின்னையா முறயிஸ் அவர்களின் பரகதியாத்திரை.

சத்யமறையின் சற்குருவாகிய அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரின் ஞானப்பிள்ளைகளென்னும் கௌரவத்தை சுமார் நானூறு வருஷமளவாக வகிக்கப்பெற்றுவரும், பரதகுலத்திலுதித்து எவராலும் நன்கு மதிக்கப்படத்தக்க குணமும், நலமும் பொருந்தியவரும் இவ்வூர் சேசு சபைக் கலாசாலையில் போதனுசிரியராகவும் தேவாலயத் திருபணிகளெனப்படும் (Music) சங்கீத சபைக்குத்தலைவராகவும் உபதேசியாராகவும் சுமார் 27-வருஷங்களாக உழைத்தவரும் பெரும்புகழ் படைத்தவருமாகிய ஸ்ரீமான் மிக்கேல் முறுயிஸ் அவர்களின் தவப்பெரும் பேற்றுக்கு ஓர் சிகரமாக ஸ்ரீமான் ஜோசப் மரிய சின்னையா முறுயிஸ் அவர்கள் 1860-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ந் தேதி இங்கு உதயமாயினர். இவர் தனது தந்தையாரின் உபதேசத்தை நன்கு மதித்தவராய் தெய்வபக்தி, பொறுமை, தாழ்ச்சி முதலிய புண்ணியங்களைச் சுமுத்திரையாயனுசரித்து நன்கு விளங்கினர். 1885-ம் வருஷம் செப்டம்பர் மீ 14-ந் தேதியில் ஸ்ரீமதி ஜெயம்மாள் கோமஸ்வாஸ் என்னும் பெண்மணியை கனம் A. தெத்ரீக். S. J. சுவாமியவர்கள் முன்பாக மெய்விவாஹஞ்செய்து கொண்டனர். பொதுநல ஊழியத்தில் தளராஊக்கமெடுத்துவரும் ஸ்ரீமான் மிக்யேல் முறுயிஸ் அவர்களென்னும் ஏக புத்திரரையும் புத்திரிகள் மூவரையும் ஈன்றனர். 1886-ம் வருஷம் ஜுலை மாதம் 5-ந் தேதியிலேயே கனம் A. H. லவுஞ்சர் சுவாமியாரவர்களால் (Music Master) சங்கீத சபைத்தலைமை உத்தியோகங் கிடைக்கப்பெற்று பாடுவதில் தக்க சாமர்த்தியமும் அனுபோகமுமுடையவரானபடியால் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தார். 1904-ம் வருஷம் பெப்ரவரி மாதம் 16-ந் தேதி விசாரணைக்குருவாயிருந்த கனம் A. J. ஹாஸ், S. J., சுவாமியாரவர்களால் கோவில் கணக்குப்பிள்ளை (உபதேசி) வேலை கிடைக்கப்பெற்று தனது அந்திய காலம்வரையில் ஒழுங்காக நடத்தி வந்தனர். இவ்வுத்தமர் 1918-ம வருஷம் பெப்ரவரி மாதம் 22-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 7¼ மணிக்கு தமக்கிருந்த நடப்பு வியாதியினால் மிக்க வருத்தப்பட்டு "சேசுமரியே சூசை யென்னை இரட்சியும்" என்னும் இனிய வேதவாக்கை பனமுறை யுச்சரித்து பரகதிக்குப் பயணமாயினர். மறுநாட் காலை சங்கைக்குரிய A. மார்ட்டின், S.J., சுவாமியாரவர்கள் A. தெத்ரீக், S. J., சுவாமியவர்கள் S. பெரியநாயகம் M. Ap. சுவாமியவர்கள் இம் மூன்று குருக்களால் அர்ச். சூசையப்பர் மையவாடியில் இவரது சடலம் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதை நோக்கும் சகோதரி சகோதரர்கள் இவ்வாற்றும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

தூத்துக்குடி,
1—3—18. } ஓர் அனுதாபி.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாதுசிரோன்மணிகளைப்பற்றிய இச சரிதையானது 417-பக்கங்கள் அடங்கியது. இஃது திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறிஸ்துவ மாணுக்கர்களில் ஒருவரால எழுதப்பட்டது. புஸதகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12 அணு இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1.

சூசை கோவிந்தராவ், ஏஜண்டு, மதுரை.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ட்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு ஸ்வாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப்பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,626	11	6
Mr. R. J. நிக்கொலாஸ் (கோலார் கோல்ட்பீல்ட்ஸ்)	5	0	0
,, S. ஜெகராவு நாய்க்கர் (குலாலம்பூர்)	2	2	0
ஆக மொத்தம்,	4,633	13	6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,140—15—0 இத் தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,328	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (மார்ச்சுமீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,358	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
North Georgetown,
Madras, E.

VICOMA BALM ! VICOMA BALM !

விக்கோமா பாம் ! விக்கோமா பாம் !

காலஞ்சென்ற சங். ஹாஸ் சுவாமிகளின் ஞாபகார்த்தமாய் ஏற்படுத்தப்பட்டது.

இடுப்புவலி, பக்கசூலை, பாரிசவாய்வு, தொண்டைநோய், தலைவலி, இருமல். கைகால் பிடிப்பு முதலிய நோய்களுக்கு ஏற்ற வெளிப்பூச்சு தைலம்; தவறுத ஆரோக்கியம் தரத்தக்கது. மற்றெல்லாவித தைலத்தைவிட மேலானது. இதை யுபயோகித்துப் பார்த்தவர்களுக்கே இதன் அருமை நன்கு விளங்கும். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் வேறு வித தைலத்தை வாங்குமுன் இதை ஒரு விசையாவது வாங்கி பரீட்சித்துப் பார்ப்பார்களாக.

விலை ஒரு டப்பி பாம் அணா 10. தபாற்கூலி பிரத்தியேகம் இதை, யுபயோகிக்கும் விவரமடங்கிய துண்டு பத்திரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும், வெளியூர் ஆர்டர்களுக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும்,

எம். பி. குழந்தைசாமி பிள்ளை,
2/74 நெம்பர் வீடு, பிராட்வே, மதருஸ்.

LAGHIAM DEPOT.

No. 44, Nomboolyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும்,

அயக்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்ம ரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு. ஒடு வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசி யில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறக்கமுடியாத பாதையைத்தரும் தந்தி மேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்த நரம்புகளை மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை, யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாளைவும் துற்பலமே எற்படாது, இது சத்தியம். தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாகிவிடும். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகாரார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளிபிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித பொய்யர்களாகிய வைத்திய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தப்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல். வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

உடனே எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே ஏஜண்டாய் நாடுவார்கள். இது உண்மை. அப்படி ஏஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்கு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம் பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும், எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. தூரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது. மற்றெந்தக் காரணத்திலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச் செய்யுமென்பதில் தடையே யில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினா லுண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷை பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரத்திற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய் எடுக்கும். பச்சைபயறு கொழம்பு. தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு, நெய் இவை அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எருமைப்பால், பசும்பால், ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன் பெண்சாதி இருவர் ஏககாலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள் யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாணமாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப் பற்றி இன்னும் எழுத முடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ 1—12—0.

போஸ்டேஜ் அணா 4.

ஒரே காலத்தில் **48-நாள்** மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

கிருஷ்ண சஞ்சீவி.

தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள். வீக்கங்கள். கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள்கொட்டின விஷம் இவைகளுக்குத் தேவதாப்பிரசாதம். நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்றாய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் உபாதை மாயமாக பறந்து ஓடிவிடும். இதற்கு சமமான மருந்து வேறே எதுவுங் கிடையாது. இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம். ஆயிரக்கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு க்ருஹத்திலும், பிரதி-பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா **8.**

டஜன் 1-க்கு ரூபா **5—0—0.**

கண் மருந்து.

கண்நோய், கண்குத்தல், கூசல், நீர்வடிதல், மங்கல். அந்திமாலை. பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல். கண் இமைபுருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த அவுஷதம். இதை உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.

எமது விலாசம் :— **லேகியம் டிபோ,**

நெ. 44, நய்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை, மதராஸ்.